# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021 – 2022

### மானியக் கோரிக்கை எண். 4


**என். கயல்விழி செல்வராஜ்**

ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2021

# பொருளடக்கம்


| தொடர் எண். | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| | முன்னுரை | 1 |
| I. | **ஆதி திராவிடர் நலன்** | |
| 1 | கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள் | 12 |
| 1.1 | பள்ளிகள் | 13–15 |
| 1.2 | கல்வி உதவித்தொகைகள் | 16–31 |
| 1.3 | கல்விக் கட்டணச் சலுகைகள் | 31–37 |
| 1.4 | பெண் கல்வி ஊக்கத்தொகைத் திட்டம் | 37–38 |
| 1.5 | பரிசுத் தொகைத் திட்டம் | 38–39 |
| 1.6 | பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல் | 40 |
| 1.7 | சீருடைகள் வழங்குதல் | 41 |
| 1.8 | பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்கள் வழங்குதல் | 42–43 |
| 1.9 | மிதிவண்டிகள் வழங்குதல் | 43–44 |
| 1.10 | நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 6 – ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்க்கும் திட்டம் | 44–45 |
| 1.11 | நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 11 – ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்க்கும் திட்டம் | 46–48 |
| 1.12 | விடுதிகள் | 48–56 |
| 2 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல் | 56–57 |
| 3 | மயானங்கள் மற்றும் மயானப் பாதை வசதி | 58 |

| தொடர் எண். | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 4 | ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் | | 58-59 |
| 5 | ஈமச்சடங்கு உதவித் தொகை | | 59 |
| 6 | ஆதி திராவிடர் துணைத் திட்டம் (SCSP) | | 60-62 |
| 7 | ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான ஒன்றிய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம் (SCA to SCSP) | | 62-64 |
| 8 | சாதிச் சான்றிதழ்கள் | | 65-66 |
| 9 | 1955-ஆம் ஆண்டு குடிமையியல் பாதுகாப்புச் சட்டம், SC மற்றும் ST (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015 | | 67-76 |
| 10 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுச் சங்கம் | | 76-77 |
| 11 | டாக்டர். பி. ஆர். அம்பேத்கர் விருது | | 78-79 |
| **II.** | **பழங்குடியினர் நலன்** | | |
| 1 | கல்வி | | 83 |
| 1.1 | பள்ளிகள் | | 83-85 |
| 1.2 | விடுதிகள் | | 86-90 |
| 1.3 | கல்வி உதவித் தொகை | | 90-94 |
| 2 | ஒன்றிய அரசின் நலத்திட்டங்கள் | | 95 |
| | அ | பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு மைய நிதியுதவி (SCA to TSS) | 95-96 |
| | ஆ | இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275(1) | 97-98 |

| தொடர் எண். | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| | இ | அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாடு | 98–99 |
| | ஈ | சிறுவன விளை பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைத் திட்டம் | 100–102 |
| | உ | பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) 2006 சட்டத்தை செயல்படுத்துதல் | 102–104 |
| | ஊ | பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் | 104–106 |
| 3 | மாநில அரசின் திட்டங்கள் | | |
| | (அ) விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் | | 107–109 |
| | (ஆ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் | | 109–111 |
| | (இ) சிறப்பு தொழில் நெறி வழிகாட்டும் மையம் | | 111–112 |
| | (ஈ) தொழிற்பயிற்சி நிலையங்கள் (ITIs) | | 112–113 |
| | (உ) பழங்குடியினர் குடியிருப்புகளில் அடிப்படை வசதி மேம்படுத்துதல் | | 113–114 |
| 4 | பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை சரிபார்த்தல் | | 114–118 |
| 5 | பழங்குடியினர் துணைத் திட்டம் | | 118–120 |

| தொடர் எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| **III.** | **தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)** | |
| 1 | பங்கு மூலதனம் | 122 |
| 2 | தாட்கோவின் நடவடிக்கைகள் | 122 |
| 2.1 | பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் | 123–137 |
| 2.2 | திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் | 138–140 |
| 2.3 | கட்டுமானப் பணிகள் | 141–143 |
| **IV.** | **நலக் குழுக்கள்** | |
| | 1. மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு | 144–145 |
| | 2. மாநில ஆதிதிராவிடர் நலக்குழு | 146 |
| | 3. தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம் | 147 |
| **V.** | **நல வாரியங்கள்** | |
| | 1. புதிரை வண்ணார் நல வாரியம் | 148 |
| | 2. தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம் | 149 |
| | 3. பழங்குடியினர் நல வாரியம் | 150 |
| **VI.** | **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு 2021–2022–ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு** | 151 |

# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2021-2022

## முன்னுரை:

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்**

**-திருவள்ளுவர்**

இக்குறள் நெறியின்படி, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பொதிந்துள்ள குறிக்கோளான எவ்வித பாகுபாடுகளுமற்ற சமத்துவ சமுதாயத்தினை உருவாக்கிட தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

சமூகத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக, ஒருங்கிணைந்த மற்றும் திட்டமிடப்பட்ட முறையில் அதிக கவனம் செலுத்திடும் பொருட்டு சமூக

நலத்துறை 1988–ஆம் ஆண்டில் மூன்றாகப் பிரிக்கப்பட்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தனியாகத் தோற்றுவிக்கப்பட்டது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வியறிவு மற்றும் சமூக–பொருளாதார நிலையினை உயர்த்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை இத்துறை உருவாக்கி முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

இதனுடன் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரது பொருளாதார முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் ஆதி திராவிடர் துணைத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் ஆகிய இரு திட்டங்களுக்கான ஒருங்கிணைப்பு முகமையாகவும் இத்துறை விளங்குகிறது.

இத்துறையின் கீழ், ஆதி திராவிடர் நலன் சார்ந்த திட்டங்களை செயல்படுத்திட ஆதி திராவிடர் நல

ஆணையரகம், பழங்குடியினர் நலன் காத்திட பழங்குடியினர் நல இயக்குநரகம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தினை செயல்படுத்திடும் சமூக நீதி மற்றும் மனித உரிமை காவல் பிரிவு மற்றும் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) ஆகிய துறைத் தலைமை அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. மேலும், பழங்குடியினரின் கலாச்சாரம் குறித்து ஆராய்ச்சி செய்திடும் பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் நீலகிரி மாவட்டத்தில் இயங்கி வருகிறது.

ஆதி திராவிடர் மக்களை கல்வியறிவு, சமூக, பொருளாதார நிலைகளில் உயர்வடையச் செய்திடும் பொருட்டு ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை நடத்துதல், வீட்டுமனைப் பட்டா வழங்குதல், குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் ஆதி திராவிடர் நல ஆணையரகம் மூலமாக கையாளப்பட்டு வருகின்றன.

பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை நடத்துதல், அவர்களது குடியிருப்புகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், வன உரிமைச் சட்டத்தினை செயல்படுத்துதல் மற்றும் அவர்களது பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகிய பணிகள் பழங்குடியினர் நல இயக்குநரகம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இம்மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மானியத்துடன் கூடிய கடனுதவி திட்டங்களுடன், இவ்வின இளைஞர்களுக்கு சுயதொழில் / வேலை வாய்ப்பினை உருவாக்கிட பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலம் அளிக்கப்பட்டு வருகின்றன.

சமூகத்தின் விளிம்பு நிலையில் இருக்கும் இம்மக்களின் உரிமைகளை பாதுகாத்திடவும்,

அவர்களுக்கெதிராக நடைபெறும் வன்கொடுமைகளை தடுத்திடும் பொருட்டும் இயற்றப்பட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் செயலாக்கத்தினை காவல் துறையின் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு கண்காணித்து வருகிறது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் செயலாக்கத்தினை கண்காணித்திட **மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு** அமைக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மக்களுக்கான திட்டங்கள் முறையாக செயல்படுத்தப்படுவதை கண்காணித்திடவும் அத்திட்டங்களின் பலன் முறையாக அம்மக்களுக்கு சென்றடைவதை ஆய்வு செய்து, கண்காணித்திடவும் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் தலைமையில் மாநில ஆதி திராவிடர் நலக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட குழுக்கள் தவிர, தமிழ்நாட்டில் இருக்கும் புதிரை வண்ணார் இன மக்களுக்கு அரசின் நலத்திட்டங்கள், உதவிகள் சென்றடைய **தமிழ்நாடு புதிரை வண்ணார் நல வாரியம்**, பழங்குடியின மக்களின் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்திற்காக **தமிழ்நாடு பழங்குடியினர் நல வாரியம்**, தமிழ்நாட்டில் தூய்மைப் பணிபுரிவோரின் மேம்பாட்டிற்கான திட்டங்களின் செயலாக்கத்தை கண்காணித்திட **தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியம்** ஆகிய நல வாரியங்கள் இத்துறையின் கீழ் இயங்கி வருகின்றன.

மேலும், தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியின மக்களின் நலன் மற்றும் முன்னேற்றத்திற்கான ஆலோசனைகளை வழங்கிட **தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம்** எனும் அமைப்பும் செயல்பட்டு வருகிறது.

இம்மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி அவர்களின் வளர்ச்சியை உறுதிப்படுத்திட, 2021–2022–ஆம்

ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் **ரூ.4142.34 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்**

ஐக்கிய நாடுகளின் உச்சி மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் 2030–இன் செயல்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள **"எவரும் விடுபடாமல் உள்ளடக்கிய வளர்ச்சி"** எனும் மையக்கருத்து இத்துறையுடன் நேரடி தொடர்புடையதாகும். இத்துறையின் முக்கிய கொள்கையான "சமூக நீதி" அனைத்து நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளிலும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் துணைத் திட்டம் [Scheduled Castes Sub Plan (SCSP)] மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் [Tribal Sub Plan (TSP)] ஆகியவற்றின் கீழ் அனைத்துத் துறைகளாலும் செயல்படுத்தப்படும் பல திட்டங்கள், "ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல்" என்ற

இலக்கு 10–இன் குறிக்கோள் 10.4-ஐ நேரடியாக அடையும் நோக்கில் உள்ளது. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளில் ஆதி திராவிடர் துணைத் திட்டம் (SCSP) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் (TSP) ஆகியவற்றில் கவனம் செலுத்தக்கூடிய ஆதி திராவிடர் துணைத் திட்ட நிதி பயன்பாடு (குறிக்கோள் (10.4.1) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்ட நிதி பயன்பாடு (குறிக்கோள் (10.4.2) ஆகிய குறிக்காட்டிகள் அடங்கியுள்ளன.

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடையும் பொருட்டு அரசாணை (நிலை) எண்.14, நாள்.31.01.2020–இன் வாயிலாக நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் அலகு இத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- இத்துறையால் செயல்படுத்தப்படும் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப்பள்ளிகள், கல்வி உதவித் தொகை திட்டங்கள், இலவசப் புத்தகங்கள், மிதி வண்டி

வழங்கும் திட்டம், மாணவ, மாணவியருக்கான விடுதிகள் ஆகிய திட்டங்கள் இலக்கு 1 (வறுமை ஒழிப்பு), இலக்கு 4 (தரமான கல்வி) மற்றும் இலக்கு 10 (ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல்) ஆகிய இலக்குகளை அடையும் நோக்கில் உள்ளன.

- பெண் கல்வி ஊக்கத் தொகை திட்டம் இலக்கு 5–ஐ (பாலின சமத்துவம்) அடையும் நோக்கில் உள்ளது.
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் மற்றும் தாட்கோவின் பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் இலக்கு 1 (வறுமை ஒழிப்பு), இலக்கு 8 (வேலை வாய்ப்பும், பொருளாதார வளர்ச்சியும்), இலக்கு 10 (ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல்) மற்றும் இலக்கு 11 (நகர்ப்புற மேம்பாடு) ஆகிய இலக்குகளை அடையும் நோக்கில் உள்ளன.

- தொழில் நெறி வழிகாட்டும் மையம், தாட்கோவால் வழங்கப்படும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் இலக்கு 1 தாட்கோவின் இதர செயல்பாடுகள் (வறுமை ஒழிப்பு), இலக்கு 4 (தரமான கல்வி), இலக்கு 8 (வேலை வாய்ப்பும் பொருளாதார வளர்ச்சியும்), இலக்கு 10 (ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல்) ஆகிய இலக்குகளை அடையும் நோக்கில் உள்ளன.
- அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினரை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட திட்டங்கள் யாவும், அனைத்து நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகளையும் உள்ளடக்குவதாக உள்ளன.

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளின் குறிக்கோள்கள் மற்றும் குறிக்காட்டிகளை மையப்படுத்தி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக, பொருளாதார அதிகாரமளித்தலை ஏதுவாக்க, இத்துறை பிற

துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது.

## I. ஆதி திராவிடர் நலன்

அனைத்து தரப்பு மக்களும் சமூகத்தில் எவ்வித வேறுபாடுமின்றி வாழ வேண்டுமென்பதே இவ்வரசின் நோக்கம். 2011–ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 7.21 கோடியில், 20.01 விழுக்காடு (1.44 கோடி) ஆதிதிராவிட மக்கள் உள்ளனர். ஆதி திராவிட மக்களின் பின்தங்கிய நிலையை நன்கு உணர்ந்துள்ள இவ்வரசு அவர்களின் நலனுக்காக பல கொள்கைகள், திட்டங்கள், வரவு செலவுத் திட்டங்கள் மற்றும் செயல்முறைத் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது.

ஆதி திராவிட மக்களின் கல்வித் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதுடன் கூடுதலாக, அவர்களது பொருளாதார மேம்பாட்டிற்காக

மானியத்துடன் கூடிய கடன்கள் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மேலும் சமூக சமத்துவத்தினை உறுதிப்படுத்தும் வகையிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நமது மாநிலத்தில், ஆதி திராவிடர்கள் சந்திக்கும் இடர்பாடுகளை எதிர்கொள்ளும் பொருட்டு, அவர்களுக்கு மானியத்துடன் கூடிய கடன்கள் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், வணிக நிறுவனங்களை அமைக்கவும், விவசாய நிலம் வாங்குவதற்காகவும் வழங்கப்படுவதுடன், இலவச வீட்டு மனைகளும் வழங்கப்படுகின்றன.

## 1. கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள்.

கல்வி ஒரு வற்றாத செல்வம் ஆகும். இது தனி மனிதனின் வாழ்க்கையை வளம்பெறச் செய்யவும், தான் சார்ந்த சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைகிறது. எனவே,

ஆதி திராவிட மக்களின் கல்வி மேம்பாட்டிற்கு உயர் முன்னுரிமையை இவ்வரசு அளிக்கிறது.

2011–ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஆதி திராவிட மக்களின் கல்வியறிவு 73.26 விழுக்காடு ஆகும். இது ஏனைய பொதுப் பிரிவினரின் கல்வியறிவு விழுக்காடான 80.09% உடன் ஒப்பிடுகையில் குறைவாக உள்ளதை அறிந்து 2021–2022–ஆம் நிதியாண்டின் திருத்த வரவு–செலவுத் திட்ட மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.4142.34 கோடி நிதியில் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக **ரூ.3480.24 கோடி** (84.02 விழுக்காடு) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.1 பள்ளிகள்

ஆதி திராவிட மக்களின் கல்வியறிவு விகிதத்தை இதர பிரிவினருக்கு இணையாக உயர்த்திடும் பொருட்டு இவ்வரசு ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை நடத்துவதுடன்,

பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள ஆதி திராவிட மாணாக்கருக்கு பல்வேறு கல்வி உதவித் தொகைகளையும் வழங்கி வருகிறது. அரசின் இத்தொடர் முயற்சிகள் ஆதி திராவிட மாணாக்கரின் கல்வியறிவு வளர்ச்சி வீதம் மற்றும் கல்வித்தரம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை ஏற்படுத்தி உள்ளது.

தமிழ்நாட்டில் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் 27,87,388 ஆதிதிராவிட மாணாக்கர் கல்வி பயின்று வருகின்றனர். (ஆதாரம்– ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் முறைமை)

இம்மக்களை கல்வியில் நிலையான முன்னேற்றம் அடையச் செய்யும் பொருட்டு, ஆதி திராவிட மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில், இத்துறையால் 1138 பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

## ஆதி திராவிடர் நலப்பள்ளிகளின் விவரம்–2020–21

| விவரம் | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 833 | 16,756 | 16,980 | 33,736 |
| நடுநிலைப் பள்ளிகள் | 99 | 4,056 | 4,091 | 8,147 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 108 | 6,460 | 6,121 | 12,581 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 98 | 15,007 | 13,788 | 28,795 |
| **மொத்தம்** | **1,138** | **42,279** | **40,980** | **83,259** |

மேலும், தொடர்ந்து பெருகி வரும் உயர்கல்விக்கான தேவையினை ஈடு செய்யும் பொருட்டு இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகள் அடுத்தடுத்த உயர் நிலைகளுக்கு நிலை உயர்த்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கரின் கல்வித் தரத்தை மேம்படுத்திடும் வகையில் தேவையான கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், குடிநீர், கழிவறைகள் ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்படுகின்றன.

ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள 2021–2022–ஆம் ஆண்டில் **ரூ.120.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.2 கல்வி உதவித்தொகைகள்

பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள, ஆதி திராவிட இன மக்களை கல்வி கற்க ஊக்கப்படுத்தும் வகையில் இவ்வரசு, கீழ்க்காணும் பல்வேறு கல்வி உதவித் தொகைகளுடன், கட்டணச் சலுகைகளையும் வழங்கி வருகிறது.

### (அ) ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை

அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளை பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்கு இத்திட்டத்தின் கீழ் பராமரிப்புப் படி மற்றும் கல்விக் கட்டணங்கள் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தினை செயல்படுத்த ஏற்படும் செலவினத் தொகை 60:40 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

**பராமரிப்புப் படி**

இத்திட்டத்தின் கீழ் மாணாக்கருக்கு வழங்கப்பட்டு வரும் படிப்பு வாரியான பராமரிப்புப் படி தொகை விவரங்கள் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

| தொகுதி | படிப்புகள் | ஒரு வருடத்திற்கான பராமரிப்புப்படி (ரூ.) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் (Hosteller) | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| I | பொறியியல், மருத்துவம், நவீன ஆடை வடிவமைப்பு தொழில் நுட்பம் (Fashion Technology), கால்நடை, வேளாண்மை மற்றும் அதைச்சார்ந்த தொழில் படிப்புகளில் பட்டம் மற்றும் முதுநிலை பட்டப்படிப்பு மேலாண்மை மற்றும் மருத்துவம் சார்ந்த பல்வேறு படிப்புகளில் முதுநிலை பட்டயம் / பட்டயக் கணக்கர் (CA/CWA/CS/CFA etc.,) மற்றும் முதுநிலை ஆராய்ச்சி மற்றும் முனைவர் பட்டப்படிப்பு (M.Phil, Ph.D., &Post Doctoral programmes) | 13,500/- | 7,000/- |

| தொகுதி | படிப்புகள் | ஒரு வருடத்திற்கான பராமரிப்புப்படி (ரூ.) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் (Hosteller) | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| II | 12 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாக கொண்ட மருந்தாக்கியல், செவிலியர், LLB, விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் ஹோட்டல் மேலாண்மை போன்ற தொழிற்படிப்புகளில் பட்டம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் (B.Sc.,(Nursing), B.Pharm, B.O.T, B.P.T, M.Sc (Nursing), M.Pharm, M.P.T etc., ) | 9,500/– | 6,500/– |
| III | தொகுதி I மற்றும் II–ல் இடம் பெறாத இதர இளங்கலை பட்டப்படிப்பு மற்றும் முதுகலை பட்டப்படிப்புகள் (எ.கா B.A./ B.Sc./B.Com./M.A.,/M.Sc./M.Com., etc., ) | 6,000/– | 3,000/– |
| IV | 10–ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாகக் கொண்ட தொழில் நுட்பப் பட்டயப்படிப்புகள், சான்றிதழ் படிப்புகள், மேல்நிலைக் கல்வி படிப்புகள் மற்றும் தொழிற்பயிற்சி படிப்புகள். (எ.கா. XI, XII, ITI, தொழிற் பயிற்சிக் கல்வி etc.,) | 4,000/– | 2,500/– |

இத்திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்கு, கல்வி நிறுவனத்திற்கு அவர்களால் செலுத்தப்பட வேண்டிய கட்டாய மற்றும் திரும்ப பெற இயலாத கட்டணங்கள் உதவித் தொகையாக மாணாக்கரின் வங்கி சேமிப்புக் கணக்குகளில் அரசால் வரவு வைக்கப்படுகின்றன.

சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்து தொழிற் கல்வி பயிலும் ஆதிதிராவிட மாணாக்கருக்காக, அரசு / அரசால் நியமிக்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கட்டாய மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு அரசால் செலுத்தப்படுகின்றன.

சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு அல்லாத இடங்களில் சேர்ந்து தொழிற் கல்வி பயிலும் ஆதிதிராவிட மாணாக்கருக்காக, அரசு / அரசால் நியமிக்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டண

நிர்ணயக் குழுவால் அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டாய மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு அரசால் ஈடு செய்யப்படுகின்றன.

**தகுதிகள்:–**

(அ) ஆதி திராவிட மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(ஆ) உரிய அதிகாரம் பெற்ற அமைப்பால் ஏற்படுத்தப்பட்ட கட்டண நிர்ணய / கட்டண வரன்முறைப்படுத்தும் குழுவால் அத்தகைய பாடப் பிரிவிற்கான கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(இ) விளம்பரம் செய்து விண்ணப்பங்களை வரவேற்றல், விண்ணப்பங்களின் தரப்பட்டியல் வெளியிடுதல், தகுதியின் அடிப்படையில் விண்ணப்பங்களை தேர்வு செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒளிவு மறைவற்ற முறையில் அத்தகைய இடங்களுக்கான சேர்க்கை முறை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் 2020–2021–ஆம் நிதியாண்டில், ரூ.1745.42 கோடி செலவில் 7,60,109 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதி ஆண்டில் **ரூ.1798.25 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை

ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளால் பயன்பெற இயலாத ஆதி திராவிடர், மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணாக்கருக்கு மாநில அரசு சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகையினை வழங்கி வருகிறது. இதற்கான 100 விழுக்காடு நிதியை மாநில அரசு வழங்குகிறது.

இத்திட்டத்தின் கீழ் பராமரிப்புப்படி மற்றும் கல்விக் கட்டணங்கள் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படுகின்றன.

**பராமரிப்புப் படி**

இத்திட்டத்தின்கீழ் மாணாக்கருக்கு வழங்கப்பட்டு வரும் படிப்புவாரியான பராமரிப்புப் படி தொகை விவரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

| தொகுதி | படிப்புகள் | ஒரு மாதத்திற்கான பராமரிப்புப்படி (ரூ.) | |
|---|---|---|---|
| | | விடுதி மாணாக்கர் (Hosteller) | வெளி மாணாக்கர் (Day Scholar) |
| I | பொறியியல், மருத்துவம் மற்றும் இதர தொழிற்படிப்புகள் | 350/- | 175/- |
| II | கலை, அறிவியல் முதுகலை பட்டப்படிப்பு | 225/- | 140/- |
| III | கலை, அறிவியல் இளங்கலை பட்டப்படிப்பு | 175/- | 100/- |
| IV | (அ) 11 மற்றும் 12 –ஆம் வகுப்பு | 175/- | 100/- |
| | (ஆ) ஐ.டி.ஐ. மற்றும் பட்டயப் படிப்புகள் | 225/- | 140/- |

மேற்காணும் பராமரிப்புப் படி மாணாக்கரின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தில் வழங்கப்படுவது போன்று கல்விக் கட்டணங்களும் வழங்கப்படுகின்றன.

**தகுதிகள்:–**

(அ) ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.

(ஆ) மாணாக்கரின் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் 2020–2021–ஆம் நிதியாண்டில், ரூ.68.11 கோடி செலவில் 27,875 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதி ஆண்டில், **ரூ.81.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (இ) ஒன்றிய அரசின் ப்ரிமெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டங்கள்

### (i) தூய்மைப்பணி மற்றும் சுகாதாரமற்ற பணிகளில் ஈடுபடுவோரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகைத் திட்டம்

தூய்மைப் பணியாளர், தோல் பதனிடுதல், தோல் உரித்தல் மற்றும் கழிவுப் பொருட்களிலிருந்து மறுசுழற்சிக்கு உகந்த பொருட்களை பிரித்து சேகரித்தல் ஆகிய தூய்மைப் பணி மற்றும் சுகாதாரமற்ற பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு சாதி, மத வேறுபாடு மற்றும் வருமான வரம்பின்றி இக்கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. 1–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களில் பயிலும் மாணாக்கர் இக்கல்வி உதவித் தொகையைப் பெற தகுதி உடையவர் ஆவர்.

இத்திட்டத்தின் கீழ் பராமரிப்புப் படியும், தனி மானியமும் உதவித்தொகையாக பின்வரும் வீதத்தில் மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகின்றன :–

| | **விடுதி மாணாக்கர் (Hosteller)** | **வெளி மாணாக்கர் (Day Scholar)** |
|---|---|---|
| பராமரிப்புப் படி (ஒரு மாதத்திற்கு) | ரூ.700/– | ரூ.225/– |
| தனி மானியம் (ஒரு வருடத்திற்கு) | ரூ.1,000/– | ரூ.750/– |

இத்திட்டத்தின் கீழ் 2020–2021–ஆம் நிதியாண்டில், ரூ.10.54 கோடி செலவில் 35,462 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளனர்.

இந்த திட்டத்திற்காக 2021–2022–ஆம் நிதியாண்டில் **ரூ.10.69 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ii) 9 மற்றும் 10–ஆம் வகுப்புகளில் பயிலும் மாணாக்கருக்கான ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டம்**

ஆதி திராவிட மாணாக்கர் 8–ஆம் வகுப்புக்கு மேல் கல்வியைத் தொடரும் வகையில் இக்கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற அல்லது மத்திய / மாநில கல்வி வாரியங்களால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிட மாணாக்கருக்கு இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை கீழ்க்கண்ட வீதத்தில் மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது:–

| | **விடுதி மாணாக்கர் (Hosteller)** | **வெளி மாணாக்கர் (Day Scholar)** |
|---|---|---|
| பராமரிப்புப் படி (ஒரு மாதத்திற்கு) | ரூ.525/– | ரூ.225/– |
| தனி மானியம் (ஒரு ஆண்டுக்கு) | ரூ.1,000/– | ரூ.750/– |

இத்திட்டத்திற்கான செலவினம் 60 : 40 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப் படுகிறது.

**தகுதி:–**

மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் 2020–2021–ஆம் நிதியாண்டில், ரூ.76.42 கோடி செலவில் 2,78,838 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக 2021–2022–ஆம் நிதியாண்டில் ரூ.**83.63** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஈ) மாநில அரசின் உயர் கல்வி சிறப்பு படிப்பு உதவித் தொகை

இத்திட்டத்தின் கீழ் கட்டண விடுதிகளில் தங்கி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி

நிறுவனங்களில் பட்ட மேற்படிப்பு பயிலும் ஆதி திராவிட மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் சிறப்பு உதவித்தொகை கீழ்க்கண்டவாறு வரவு வைக்கப்படுகிறது:—

| **வ. எண்** | **படிப்புகள்** | **உதவித் தொகை (ஒரு ஆண்டுக்கு)** |
|---|---|---|
| 1 | இளங்கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்புகள் மற்றும் பல்தொழில்நுட்ப பட்டய படிப்புகள் | ரூ.7,500/— |
| 2 | முதுகலை அறிவியல் பட்டப் படிப்புகள் மற்றும் இளங்கலை / முதுகலை தொழிற்படிப்புகள். | ரூ.8,000/— |

**தகுதி:—**

மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் 2020–2021–ஆம் நிதியாண்டில், ரூ.5.93 கோடி செலவில் 7,633 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதியாண்டில், **ரூ.12.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(உ) வெளிநாடுகளில் முதுகலைப்பட்டம் மற்றும் ஆராய்ச்சி படிப்புகளை பயில்வோருக்கான கல்வி உதவித்தொகைத் திட்டம்**

பொறியியல், தொழில்நுட்பவியல், மருத்துவம், அறிவியல் பாடப்பிரிவுகளில் முதுகலைப் பட்டம் மற்றும் அதற்கு மேற்பட்ட முனைவர் ஆராய்ச்சி படிப்பு போன்ற உயர் கல்வியினை வெளிநாடுகளில் பயில்வதற்கு ஆதி திராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர் பெரிதும் விரும்புகின்றனர். அவர்களை ஊக்குவிக்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனினும், இத்திட்டம் துவங்கப்பட்டதிலிருந்து இது

வரை 4 மாணாக்கர் மட்டுமே பயனடைந்துள்ளனர். எனவே, இம்மாணாக்கர் உயர்கல்வியை பெறுவதற்கும், வேலை வாய்ப்புகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையிலும் இத்திட்டம் திருத்தி அமைக்கப்படும்.

இத்திட்டத்தை செயல்படுத்துவற்காக 2021–2022–ஆம் நிதியாண்டில் **ரூ.5.31 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஊ) முழு நேர முனைவர் ஆராய்ச்சிப் படிப்பிற்கான ஊக்கத்தொகை**

தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் மருத்துவம், பொறியியல், கலை, அறிவியல், சட்டம், இலக்கியம், அரசியல் அறிவியல் போன்ற படிப்புகளில் முழுநேர முனைவர் ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்ளும் ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர், பழங்குடியின ஆய்வு மாணாக்கரை ஊக்குவிக்கும் வகையிலும், அதிக எண்ணிக்கையிலான

மாணவர்களுக்கு பயனளிக்கும் வகையிலும் முழு நேர முனைவர் படிப்பிற்கான கல்வி உதவித் தொகைத் திட்டம் மறு சீரமைக்கப்பட்டு செயல்படுத்தப்படும்.

அவ்வகையில், இதுவரை வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை ரூ.50,000/-ஐ ரூ.1,00,000/- ஆக உயர்த்தி வழங்கி இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்திற்காக 2021-2022-ஆம் நிதியாண்டில் **ரூ.16.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.3 கல்வி கட்டணச் சலுகைகள்

### (அ) கற்பிப்புக் கட்டணச் சலுகை

கல்வியின் மூலமே சமூக மாற்றத்தை உருவாக்க முடியும் என்பதை உணர்ந்துள்ள இவ்வரசு, ஆதிதிராவிட மாணவர்கள் அனைவருக்கும் கல்வி புகட்ட வேண்டியதை தலையாய நோக்கமாக கொண்டுள்ளது. இதனை செயல்படுத்தும் விதமாக அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்வி

நிறுவனங்களில் கல்வி பயிலும் ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர், அவர்தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரது வருமான உச்ச வரம்பு எதுவும் இல்லாமல், கல்வி நிலையங்களுக்கு கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டுள்ளனர். இக்கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு அரசால் நேரடியாக ஈடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2020–2021–ஆம் நிதியாண்டில், ரூ.13.14 கோடி மதிப்பிலான 20,022 மாணாக்கருக்கான கற்பிப்புக் கட்டணங்கள் அரசால் செலுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதியாண்டில், **ரூ.10.51 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) இளங்கலை மாணாக்கருக்கு சலுகைகள்

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர், அவர்தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரது வருமான உச்ச வரம்பு எதுவும் இல்லாமல், சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் 2020–2021–ஆம் நிதியாண்டில், ரூ.23.50 இலட்சம் மதிப்பீட்டில், 752 மாணாக்கர் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதியாண்டில், **ரூ.8.00 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) முதுகலை பயிலும் மாணவியருக்கு சலுகைகள்

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை பட்டப்படிப்பு பயிலும் ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவியர், அவர்தம் பெற்றோர் அல்லது பாதுகாவலரது வருமான உச்ச வரம்பு எதுவும் இல்லாமல், சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் 2020–2021–ஆம் நிதியாண்டில், ரூ.5.41 இலட்சம் மதிப்பில் 85 மாணவியருக்கான சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டணங்கள் அரசால் செலுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதியாண்டில், **ரூ.6.00 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## (ஈ) பள்ளி மாணாக்கருக்கு சிறப்பு மற்றும் கற்பிப்பு கட்டணச் சலுகை

ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணாக்கருக்கும் சிறப்புக் கட்டணம் மற்றும் கற்பிப்பு கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டு உள்ளனர். இக்கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு அரசால் நேரடியாக விடுவிக்கப்படுகிறது

இத்திட்டத்தின்கீழ் 2020–2021–ஆம் நிதியாண்டில், ரூ.40.05 இலட்சம் செலவில் 44,607 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதியாண்டில், **ரூ.45.00 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (உ) இதர கட்டணச் சலுகைகள்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில், 10, 11 மற்றும் 12-ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிடர், மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இன மாணாக்கர் தேர்வுக் கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர். இக்கட்டணம் அரசு தேர்வுகள் இயக்குநரகத்திற்கு நேரடியாக ஈடு செய்யப்படுகிறது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இளங்கலை, முதுகலை மற்றும் தொழிற்கல்வி படிப்புகளுக்கு விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து ஆதி திராவிடர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கருக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. இக்கட்டணங்கள் கல்வி நிலையங்களுக்கு அரசால் நேரடியாக ஈடு செய்யப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2020–2021–ஆம் நிதியாண்டில், ரூ.2.68 கோடி செலவில் 42,918 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதியாண்டில், **ரூ.2.90 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.4 பெண்கல்வி ஊக்கத் தொகைத் திட்டம்

பெண்கல்வி என்பது சமத்துவம் மற்றும் சமூக நீதியின் ஒரு முக்கியமான அங்கமாகும். அதனை மனதில் கொண்டு பெண்களிடையே கல்வி பயில்வதை ஊக்கப்படுத்தும் வகையில் மாநில அரசால் பெண்கல்வி ஊக்கத் தொகைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதன்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிட மாணவியர் 100 விழுக்காடு பள்ளியில் சேர்வதை உறுதி செய்வதற்கும், அவர்களது இடை நிற்றலை (Drop out)

குறைப்பதற்காகவும், ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதன் விவரம் பின்வருமாறு :–

| வகுப்பு | தொகை (ஆண்டொன்றுக்கு) | 2021–22 நிதி ஒதுக்கீடு |
|---|---|---|
| 3 முதல் 5 வரை | ரூ.500/– | ரூ.11.31 கோடி |
| 6 | ரூ.1000/– | ரூ.34.00 கோடி |
| 7 மற்றும் 8 | ரூ.1500/– | |

இத்திட்டத்தின் கீழ் 2020–2021–ஆம் நிதியாண்டில், ரூ.38.40 கோடி செலவில் 3,99,679 மாணவியருக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

## 1.5 பரிசுத் தொகைத் திட்டம்

பரிசுகள் வழங்குவது மற்றும் பாராட்டுகள் மாணாக்கரை ஊக்குவிக்கும் உந்து சக்தியாக விளங்குகின்றன. இவை அவர்கள் நன்கு படித்து நல்ல வேலை வாய்ப்புகளை பெற வழிவகுக்கும். அதனடிப்படையில், இளங்கலை பட்டப்படிப்பு,

முதுகலை பட்டப்படிப்பு மற்றும் தொழிற்படிப்புத் தேர்வுகளில் 60 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெறும் முதல் 1000 ஆதி திராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு [இளங்கலை (500 மாணாக்கர்), முதுகலை (300 மாணாக்கர்) மற்றும் தொழிற்படிப்பு (200 மாணாக்கர்)] பரிசுத் தொகை பின்வருமாறு வழங்கப்படுகிறது:-

| படிப்பு | தொகை (ஒருவருக்கு) | பரிசு பெறும் மாணவர் எண்ணிக்கை | 2021-2022 நிதி ஒதுக்கீடு (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|
| இளங்கலை | ரூ.3000/- | 500 | 15 .00 |
| முதுகலை | ரூ.5000/- | 300 | 15.00 |
| தொழிற்படிப்பு | ரூ.6000/- | 200 | 12.00 |
| | | **மொத்தம்** | **42.00** |

2020-2021-ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ.42.00 இலட்சம் மதிப்பிலான பரிசுத் தொகை 1000 மாணாக்கருக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 1.6 பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்

பெற்றோர்களின் நிதிச் சுமையைக் கருத்தில் கொண்டும், அனைத்து மாணவர்களுக்கும் கல்வி புகட்ட வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டும், இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில் 1 முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு பாடப் புத்தகங்களும், 1 முதல் 10–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு குறிப்பேடுகளும் பள்ளிக் கல்வித் துறை மூலமாக வழங்கப்படுகின்றன.

2020–2021–ஆம் நிதியாண்டில், ரூ.1.22 கோடி செலவில் 41,961 மாணவர்களுக்கும் மற்றும் 42,208 மாணவியருக்கும் பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதியாண்டில் **ரூ.1.50 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.7 சீருடைகள் வழங்குதல்

ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் இத்துறையால் நடத்தப்படும் பள்ளி விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கருக்கு நான்கு இணை சீருடைகள் சமூக நலத்துறையின் கீழ் இயங்கும் மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தைத்து வழங்கப்படுகின்றன.

2020-2021-ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ.11.10 கோடி செலவில் 43,412 மாணவர்களுக்கும் மற்றும் 32,609 மாணவியருக்கும் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2021-2022-ஆம் நிதியாண்டில் **ரூ.13.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.8 பருவ இதழ்கள் மற்றும் புத்தகங்கள் வழங்குதல்

இத்துறையால் நடத்தப்படும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரின் பொது அறிவுத் திறனை மேம்படுத்தவும், அவர்கள் குடிமைப்பணி தேர்வுகள் மற்றும் இதர போட்டித் தேர்வுகளுக்கு தயாராகவும் புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் பின்வருமாறு வாங்கி வழங்கப்படுகின்றன:–

| வ. எண் | பள்ளிகள் / விடுதிகள் | நூலக புத்தகங்கள் | பருவ இதழ்கள் |
|---|---|---|---|
| | | ( ஆண்டு ஒன்றுக்கு) | |
| 1. | உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் | ரூ.1,000/– | ரூ.450/– |
| 2. | பள்ளி விடுதிகள் | –– | ரூ.450/– |
| 3. | கல்லூரி விடுதிகள் | –– | ரூ.3,100/– |

2020–2021–ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ.9.02 இலட்சம் மதிப்பிலான புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதியாண்டில் **ரூ.13.70 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.9 மிதிவண்டிகள் வழங்குதல்

வெகு தொலைவிலிருந்து பள்ளிகளுக்கு கல்வி பயில வரும் மாணாக்கர் தொடர்ந்து கல்வி பயிலும் வகையில் அரசு, அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில், 11–ஆம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கருக்கும், 11–ஆம் வகுப்பில் மிதிவண்டிகள் வழங்காமல் விடுபட்டு, 12–ஆம் வகுப்பில் பயிலும் மாணாக்கருக்கும் மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

2020–2021–ஆம் நிதியாண்டில், ரூ.62.07 கோடி செலவில் 68,000 மாணவர்களுக்கும் மற்றும் 89,558 மாணவியருக்கும் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதியாண்டில் **ரூ.65.40 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.10 நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 6–ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்த்தல்

மாணவர்களுக்கு நல்ல எதிர்காலத்தை உருவாக்கித் தரும் நோக்கத்துடன் இத்திட்டம் 2008–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்படி, ஆதி திராவிடர் நலப்பள்ளிகள் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் 5–ஆம் வகுப்பில் தேர்ச்சி பெறும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம்

மாறிய ஆதி திராவிட மாணாக்கர் அனைவருக்கும் கல்வித் திட்ட அலுவலரின் (SSA) உதவியுடன் சிறப்புத் தேர்வு ஒன்றினை நடத்தி அதில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணாக்கருள், வட்டாரத்திற்கு (Block) ஒருவர் வீதம் 385 வட்டாரங்களில் இருந்து 385 மாணாக்கரை தேர்வு செய்து, அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரை பெற்று, சிறந்த உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6–ஆம் வகுப்பில் சேர்த்து, அவர்கள் தொடர்ந்து 12–ஆம் வகுப்பு வரை கல்வி பயில ஆகும் செலவினத்தை அரசே ஏற்றுக் கொள்கிறது.

2020–2021–ஆம் நிதியாண்டில், ரூ.10.16 கோடி செலவில் 1,931 மாணாக்கர் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதியாண்டில் **ரூ.13.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.11 நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 11–ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்க்கும் திட்டம்

நற்பெயர் பெற்ற பள்ளிகளில் 11–ஆம் வகுப்பில் மாணாக்கரை சேர்க்கும் இத்திட்டம் 2007–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு, அரசு நிதியுதவி பெறும், மாநகராட்சி, நகராட்சி, ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கல்வி பயின்று 10–ஆம் வகுப்பில் சிறந்த மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர், இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு சிறந்த தனியார் பள்ளிகளில் 11–ஆம் வகுப்பில் சேர்க்கப்படுகின்றனர். 10–ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டவுடன் மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள், இணையதளத்தின் வாயிலாக அல்லது முதன்மைக்

கல்வி அலுவலரிடமிருந்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த சிறந்த மதிப்பெண் பெற்ற 10 மாணாக்கரின் பெயர்ப் பட்டியலைப் பெற்று, அதே மாவட்டம் அல்லது அருகில் உள்ள மாவட்டங்களில் உள்ள சிறந்த தனியார் பள்ளிகளில் 11–ஆம் வகுப்பில் அவர்களைச் சேர்த்து, அவர்களுக்கான கல்விக் கட்டணம் அந்தக் கல்வி நிலையங்களுக்கு விடுவிக்கப்படுகின்றது. ஒரு மாணாக்கருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.28,000/– வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு ரூ.56,000/– அரசு செலவிடுகிறது.

**தகுதி:**

பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2020–2021–ஆம் நிதி ஆண்டில், ரூ.79.00 இலட்சம் செலவில் 185 மாணவர்களும் மற்றும் 259 மாணவியரும் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதி ஆண்டில் **ரூ.2.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.12 விடுதிகள்

ஆதி திராவிட மாணாக்கர் தமது படிப்பில் முழு கவனம் செலுத்துவதை ஊக்கப்படுத்தும் வகையில், அவர்களது கல்வித் திறனை ஊக்குவித்து முன்னேற்றவும், கிராமப்புறங்களில் உள்ள ஆதி திராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணாக்கரின் இடைநிற்றலை தவிர்க்கவும் அவர்கள் படிக்கும் கல்வி நிறுவனங்களுக்கு அருகிலேயே தங்கி, சிறப்புடன் கல்வி பெற இத்துறையால் 1326 விடுதிகள் நடத்தப்படுகின்றன.

இத்துறையின் கீழ் இயங்கி வரும் ஆதி திராவிடர் நல விடுதிகளும் அவற்றில் ஒப்பளிக்கப்பட்டுள்ள மாணாக்கரின் எண்ணிக்கையும் பின்வருமாறு:–

## ஆதி திராவிடர் நல விடுதிகளின் விவரம் (2020–2021)

| விடுதியின் வகை | விடுதிகளின் எண்ணிக்கை | | | மாணாக்கரின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | மாணவர் | மாணவியர் | மொத்தம் | மாணவர் | மாணவியர் | மொத்தம் |
| பள்ளி விடுதிகள் | 742 | 401 | 1,143 | 54,331 | 28,435 | 82,766 |
| கல்லூரி விடுதிகள் | 67 | 78 | 145 | 7,506 | 5,644 | 13,150 |
| ஐ.டி.ஐ. விடுதிகள் | 15 | 2 | 17 | 1,256 | 116 | 1,372 |
| பாலிடெக்னிக் விடுதிகள் | 3 | 2 | 5 | 178 | 110 | 288 |
| முதுகலைப் பட்டதாரி கல்லூரி விடுதிகள் | 9 | 6 | 15 | 693 | 315 | 1,008 |
| சட்டக் கல்லூரி விடுதிகள் | 1 | 0 | 1 | 55 | 0 | 55 |
| மொத்தம் | 837 | 489 | 1,326 | 64,019 | 34,620 | 98,639 |

➢ தமிழ்நாடு கேரள எல்லையோரப் பகுதிகளில் உள்ள காபி / தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்ட தமிழர்களின்

குழந்தைகள் தங்கி கல்வி பயில ஏதுவாக தேனி மாவட்டத்தில் உள்ள 16 விடுதிகளில் தலா 10 இடங்கள் (160 மொத்த இடங்கள்) கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

- ஒவ்வொரு விடுதியிலும் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகள் தங்கி கல்வி பயில ஏதுவாக 5 கூடுதல் இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## அ. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள்:–

i. கல்லூரி விடுதிகளுக்கு இரண்டு அடுக்கு படுக்கை வசதி கொண்ட கட்டில்கள் மற்றும் ஜமுக்காளம்.

ii. நீராவி கொதிகலன்கள்.

iii. குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள், மாவு அரைக்கும் இயந்திரங்கள், மற்றும் மின்னணு எடை இயந்திரங்கள்.

iv. ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு சலவை இயந்திரங்கள் மற்றும் சுகாதாரக் குட்டை தகளிகள்.

v. மருந்துகள் அடங்கிய முதலுதவிப் பெட்டி.

vi. நூலக வசதி

vii. சமையல் எரிவாயு இணைப்பு.

viii. செய்தித்தாள்கள்.

ix. பாய், போர்வை மற்றும் உறையுடன் கூடிய தலையணைகள்.

x. எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்.

xi. கல்லூரி விடுதிகளுக்கு "இந்தியா ஆண்டுப் புத்தகம்", மற்றும் "திட்டம்" மாத இதழ்.

2021–2022–ஆம் ஆண்டில் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளின் மேம்பாட்டிற்கென ரூ.25.00 கோடி சிறப்பு மூலதன நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆ. உணவுக் கட்டணம்.**

ஆதி திராவிடர் நல விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணாக்கருக்கு உணவுக் கட்டணமும், சில்லரைச் செலவினமும் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகின்றன:–

| **கட்டணங்களின் வகைகள்** | **பள்ளி மாணாக்கர்** | **கல்லூரி மாணாக்கர்** |
|---|---|---|
| உணவுக் கட்டணம் (ஒரு மாதத்திற்கு) | ரூ.1000/– | ரூ.1100/– |
| சில்லரைச் செலவினம் (சோப்பு, எண்ணெய், சிகைக்காய் வாங்குதல் மற்றும் முடி வெட்டுதல்) (ஒரு மாதத்திற்கு) | ரூ.50/– | ரூ.75/– |
| சிறப்பு உணவுக் கட்டணம் (பொங்கல், குடியரசு தினம், தமிழ் வருடப் பிறப்பு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி விழா நாட்களில்) | ரூ.20/– | ரூ.40/– |

## பள்ளி விடுதி – வாராந்திர உணவுப் பட்டியல்

| கிழமை | காலை சிற்றுண்டி | நண்பகல் உணவு | மாலை | இரவு உணவு |
|---|---|---|---|---|
| திங்கள் | ரவை கிச்சடி, சட்னி | சாதம், காய்கறி குருமா, கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர் | சாதம், காரக்குழம்பு, இஞ்சி இரசம், பொரியல், முட்டை(1) |
| செவ்வாய் | பொங்கல், சட்னி | சாதம், சாம்பார், பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர் | சாதம், சாம்பார், கூட்டு, முட்டை(1) |
| புதன் | எலுமிச்சை சாதம், துவையல் | சாதம், மட்டன் (80 கிராம்)/சிக்கன் (100 கிராம்) குருமா, கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர் | சாதம், காரக்குழம்பு, இரசம் |
| வியாழன் | ரவை கிச்சடி, சட்னி | சாதம், சாம்பார், பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர் | சாதம், காரக்குழம்பு, பொரியல், இரசம், முட்டை (1) |
| வெள்ளி | பொங்கல், சட்னி | சாதம், மோர்க்குழம்பு, பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி / தேநீர் | சாதம், காரக்குழம்பு, பொரியல், இரசம், முட்டை (1) |
| சனி | இட்லி, சட்னி | சாதம், சாம்பார், கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், சாம்பார், கூட்டு, முட்டை(1) |
| ஞாயிறு | இட்லி, சாம்பார் | சாதம், சாம்பார், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், தக்காளி சூப், பொரியல், இரசம் |

# கல்லூரி விடுதி – வாராந்திர உணவுப் பட்டியல்

| கிழமை | காலை சிற்றுண்டி | நண்பகல் உணவு | மாலை | இரவு உணவு |
|---|---|---|---|---|
| திங்கள் | பொங்கல், சட்னி | சாதம், சாம்பார், பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், காரக்குழம்பு, பொரியல், இரசம், முட்டை(1) |
| செவ்வாய் | இட்லி, சாம்பார் | சாதம், காய்கறி குருமா, கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், சாம்பார், பொரியல், இரசம் முட்டை(1), |
| புதன் | ரவை கிச்சடி, சட்னி | சாதம், மட்டன் (80 கிராம்) /சிக்கன் (120 கிராம்) குருமா, பொரியல் மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், தக்காளி சூப், பொரியல், இரசம் |
| வியாழன் | எலுமிச்சை சாதம், துவையல் | சாதம், குழம்பு, கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், காரக்குழம்பு, பொரியல், இரசம், முட்டை(1) |
| வெள்ளி | ரவை கிச்சடி, சட்னி | சாதம், சாம்பார், பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், சாம்பார், இரசம், பொரியல், மோர், முட்டை (1) |
| சனி | இட்லி, சாம்பார் | சாதம், சாம்பார், கூட்டு, மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | சாதம், சாம்பார், இரசம், மோர், முட்டை (1) |
| ஞாயிறு | பொங்கல், சட்னி | சாதம், காய்கறி குருமா, பொரியல், மோர் | சுண்டல், சுக்குமல்லி காபி/ தேநீர் | இட்லி, சாம்பார். |

## இ. தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி

### (i) விடுதிகள்:–

இத்துறை விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு வழங்கப்படுவது போலவே, 15 தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 23 விடுதிகளில் தங்கிப்பயிலும் 4659 ஆதி திராவிடர் மாணாக்கருக்கு உணவுக் கட்டணம், பல்வகைச் செலவினம் மற்றும் இதர சலுகைகளும் இத்துறை மூலம் வழங்கப்படுகிறது.

### (ii) பள்ளியுடன் இணைந்த விடுதிகள்:

தூத்துக்குடி மாவட்டம், முத்துக்கருப்பன் நினைவு கல்வி அறக்கட்டளையால் நடத்தப்படும் பள்ளி மற்றும் விடுதிகளில் பணிபுரியும் 160 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்களுக்கான ஊதியம் அரசால் மானியமாக 2006–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2020-2021-ஆம் நிதியாண்டில், ரூ.9.88 கோடி செலவில் மொத்தம் 160 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2021-2022-ஆம் நிதி ஆண்டில் ரூ.9.91 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்குதல்

பெரும்பாலான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் பொருளாதார நலிவின் காரணமாக வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை அடிப்படை வசதிகளுடன் கொடுத்தால் அவர்களின் சமூக நிலையை உயர்த்த ஏதுவாகும் என்பதால், வீடற்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இலவச வீட்டு மனைப்

பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கான நிலம் தனியார் பேச்சுவார்த்தை மூலம் வாங்கப்பட்டு அல்லது நில எடுப்பு சட்டங்களின்படி கையகப்படுத்தப்பட்டு, தகுதியுள்ள பயனாளிகளுக்கு பட்டாக்கள் கீழ்க்கண்ட உள்ளாட்சிப் பகுதிகளில் வழங்கப்பட்டு வருகின்றன.

| பகுதி | வழங்கப்படும் இடத்தின் அளவு | பயனாளியின் ஆண்டு வருமான வரம்பு |
|---|---|---|
| கிராமப்புறம் | 3 செண்ட் | ரூ.72,000/- |
| நகராட்சி | 1 ½ செண்ட் | |
| மாநகராட்சி | 1 செண்ட் | |

2020-2021-ஆம் நிதியாண்டில், ரூ.4.21 கோடி செலவில் 458 பயனாளிகளுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2021-2022-ஆம் நிதி ஆண்டில் மொத்தம் **ரூ.6.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3. மயானங்கள் மற்றும் மயானப் பாதை வசதி

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மயான வசதி மற்றும் மயானப் பாதைகள் அமைத்துக் கொடுத்திடும் திட்டத்தின் கீழ் நிலங்களை கையகப்படுத்துவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது.

இத்திட்டத்திற்கென 2021-2022-ஆம் நிதியாண்டில் **ரூ.75.84 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4. ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்.

ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தரும் பொருட்டு 2018-2019-ஆம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் ரூ.100.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதியாண்டில் **ரூ.100.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. ஈமச்சடங்கு உதவித்தொகை

ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இனத்தைச் சார்ந்தவர்களின் குடும்பங்களுக்கு, குடும்ப உறுப்பினர்களின் இறப்பு நேரத்தில் ஈமச் சடங்கினை மேற்கொள்ள உதவியாக ரூ.5000/–நிதி வழங்கப்படுகிறது.

2020–2021–ஆம் நிதியாண்டில், ரூ.9.07 கோடி செலவில் 36,285 பயனாளிகளுக்கு இவ்வுதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதியாண்டில் ரூ.9.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. ஆதி திராவிடர் துணைத் திட்டம் (SCSP)

பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் ஆதிதிராவிட மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என அரசு கருதுகிறது.

இம்மக்களை சமூக, பொருளாதார மற்றும் கல்வியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை எய்திடச் செய்யும் பொருட்டு ஆதி திராவிடர் துணைத் திட்டம் தமிழ்நாட்டில் 1980–1981–ஆம் நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாநிலத்தின் மொத்தத் திட்ட நிதியிலிருந்து தமிழ்நாட்டின் ஆதி திராவிடர் மக்கள் தொகை விகிதத்திற்கு (20.01%) இணையாக நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்துவதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

2021–2022–ஆம் ஆண்டு மாநில திட்ட ஒதுக்கீடான (மாநில நலத்திட்ட செலவினம் – Welfare Expenditure of State) ரூ.67,097.46 கோடியில்,

ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின் (ஆதி திராவிடர் நலத்திட்ட செலவினம் – Expenditure on Scheduled Castes Welfare) கீழ் ரூ.14,696.60 கோடி (21.90 விழுக்காடு) மாநில அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. இது மாநிலத்தில் உள்ள ஆதி திராவிடர் இன மக்கள் தொகை விழுக்காட்டை (20.01%) விட அதிகமானதாகும்.

ஆதி திராவிடர்களுக்கான திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காக, செயலாக்கத் துறைகளால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள் இத்துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர். 48 துறைத் தலைமைகளை உள்ளடக்கிய 19 செயலாக்கத் துறைகள் வாயிலாக ஆதி திராவிடர் மக்களின் மேம்பாடு மற்றும் நலனுக்காக இத்துணைத் திட்டத்தின் கீழ் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

மாநில அளவில் இத்துணைத் திட்டத்தின் கீழ் திட்டங்களை தீட்டுவதற்கும், செயல்படுத்துவதற்கும் இத்துறை ஒருங்கிணைப்புத் துறையாக (Nodal

Department) விளங்குகிறது. இத்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் ஒருங்கிணைப்பு அலுவலராக (Nodal Officer) அங்கீகரிக்கப்பட்டுள்ளார். மேலும், மாவட்ட அளவில் இத்திட்டங்களைக் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் ஆதி திராவிடர் நல ஆணையர் கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## 7. ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான ஒன்றிய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம் (SCA to SCSP)

இத்திட்டத்தின் கீழ் மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் ஆதிதிராவிடர் துணைத் திட்டத்திற்கு கூடுதலாக வலுசேர்க்கும் பொருட்டு ஒன்றிய அரசால் ஆண்டு தோறும் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், ஆதிதிராவிட

மக்களின் உற்பத்தித் திறன் மற்றும் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் வருவாய் ஈட்டக்கூடிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதற்காகவும், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கவும், ஒன்றிய அரசு கூடுதலாக நிதியுதவி வழங்குகிறது.

இந்த நிதியில் 80 விழுக்காடு ஆதி திராவிடர் மக்களின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காகவும், 10 விழுக்காடு வேலையில்லா ஆதி திராவிடர் இளைஞர்களுக்கு தாட்கோ மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சியளிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் ஆதி திராவிட மக்கள் வசிக்கும் குடியிருப்புகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கிடும் பொருட்டு மீதமுள்ள 10 விழுக்காடு நிதி ஆதி திராவிடர் நல ஆணையருக்கு விடுவிக்கப்படுகிறது.

2021-2022-ஆம் ஆண்டு முதல் , ஏற்கனவே இயங்கி வரும் பிரதம மந்திரியின் முன்னோடி கிராமத்

திட்டம் (Pradhan Mantri Adarsh Gram Yojana–PMAGY), ஆதிதிராவிடர் துணைத் திட்டத்திற்கான ஒன்றிய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம் (Special Central Assistance to Scheduled Castes Sub Plan–SCA to SCSP), பாபு ஜெகஜீவன்ராம் விடுதி கட்டும் திட்டம் (Babu Jagjivan Ram Chatrawas Yojana–BJRCY) ஆகிய மூன்று திட்டங்களை ஒருங்கிணைத்து பிரதம மந்திரியின் ஆதிதிராவிட மக்கள் முன்னேற்றத் திட்டம் (Pradhan Mantri – Anusuchit Jaati Abhyuday Yojana – PM–AJAY) எனும் புதிய திட்டமாக ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென, 2021–2022–ஆம் நிதியாண்டில் ரூ.150.00 கோடி நிதி ஒன்றிய அரசிடமிருந்து கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 8. சாதிச் சான்றிதழ்கள்

### (i) சாதிச்சான்று வழங்குதல்

ஆதி திராவிடர்களுக்கான சாதிச் சான்றிதழ்கள் வழங்கும் அதிகாரம் வட்டாட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது. வட்டாட்சியரால் ஆதி திராவிடர்களுக்கு சாதிச்சான்று வழங்க மறுக்கப்படும் பட்சத்தில் வருவாய் கோட்டாட்சியர் அல்லது சார்ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்வதுடன், அதன்பிறகு குறைகள் நீடிப்பின் அவற்றினை நிவர்த்தி செய்ய மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகலாம்.

### (ii) சாதிச்சான்றுகளின் மெய்த்தன்மையை சரிபார்த்தல்

சில நேர்வுகளில் போலியான சான்று அளித்து இதர இனத்தவர்கள் கல்வி நிறுவனங்களில் சேர்தல், பொதுப் பணிகளில் நியமனம் பெறுதல் மூலம் உண்மையான ஆதி திராவிடர் பாதிக்கப்படுகின்றனர். எனவே, ஆதி திராவிடர் சாதிச் சான்றிதழ்களின்

மெய்த்தன்மையினை அறிய மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழுக்கள் கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளன:–

## மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு

| | | | |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் | தலைவர் | ஆதி திராவிடர் என வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினைக் கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கலாம். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 226–ன்படி உயர் நீதிமன்றத்திலும், சட்டக்கூறு 136–ன்படி உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம். |
| 2 | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் | உறுப்பினர்– செயலர் | |
| 3 | மானுடவியல் வல்லுநர் | உறுப்பினர் | |

## 9. 1955 ஆம் ஆண்டு குடிமையியல் பாதுகாப்புச் சட்டம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், 1989 மற்றும் திருத்தச் சட்டம், 2015

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிராக நிகழும் தீண்டாமை மற்றும் வன்கொடுமைகளைத் தடுக்கும் பொருட்டு இந்திய அரசால் இயற்றப்பட்ட 1955–ஆம் ஆண்டு குடிமையியல் பாதுகாப்புச் சட்டம், 1989–ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் மற்றும் திருத்தச் சட்டம், 2015, வன்கொடுமைகள் தடுப்பு விதிகள், 1995 மற்றும் திருத்த விதிகள், 2016 மற்றும் 2018 போன்றவை மாநில அரசால் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட திருத்தச் சட்டம், 2015 மற்றும் திருத்த விதிகள், 2016 மற்றும் 2018 ஆகியவை முறையே 01.01.2016, 14.04.2016 மற்றும் 27.06.2018 ஆகிய தேதிகளில் அமலுக்கு வந்துள்ளன.

கூடுதல் காவல்துறைத் தலைவர் தலைமையின் கீழ், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு ஒன்று இந்த இரு சட்டங்களின் கீழ் வழக்குகள் பதிவு செய்தல், புலன் விசாரணை, வழக்கு தொடுத்தல் ஆகியவற்றை மேற்பார்வை செய்வது மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு பாதுகாப்பு அரணாக விளங்குவதும் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவின் பணிகளாகும்.

## (அ) தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள்

குடிமையியல் பாதுகாப்புச் சட்டம் 1955 மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் 1989 ஆகியவற்றின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விரைந்து முடிக்க தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது செயல்பட்டு வரும் தனியுறு சிறப்பு நீதிமன்றங்களின் விவரம் பின்வருமாறு:–

| மாவட்டத்தின் பெயர் | குறிப்பு |
|---|---|
| 1. திருச்சிராப்பள்ளி<br>2. தஞ்சாவூர்<br>3. மதுரை<br>4. திருநெல்வேலி | அரசாணை (நிலை) எண்.2686, உள் (நீதிமன்றங்கள்) துறை, நாள் 13.11.1981–இன்படி செயல்பட்டு வருகின்றன. |
| 5. விழுப்புரம்<br>6. சிவகங்கை | அரசாணை (நிலை) எண்.793, உள் (நீதிமன்றங்கள்) துறை, நாள் 07.10.2013–இன்படி செயல்பட்டு வருகின்றன. |
| 7. திண்டுக்கல்<br>8. இராமநாதபுரம்<br>9. விருதுநகர் (ஸ்ரீவில்லிபுத்தூர்)<br>10. புதுக்கோட்டை | அரசாணை (நிலை) எண்.334, உள் (நீதிமன்றங்கள்) துறை, நாள் 6.4.2017–இல் 16 மாவட்டங்களில் 16 தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் 2016–2017 முதல் 2020–2021 வரையில் 4 கட்டங்களில் உருவாக்குவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளன.<br>முதற்கட்டமாக 4 மாவட்டங்களில் 4 தனியுறு சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்க நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு 14.8.2018 முதல் செயல்பட்டு வருகின்றன. |
| 11. கடலூர்<br>12. நாமக்கல்<br>13. தேனி<br>14. திருவண்ணாமலை | அரசாணை (நிலை) எண்.1704, உள் (நீதிமன்றங்கள்) துறை, நாள் 3.10.2018–இல் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு 4 நீதிமன்றங்கள் 3.4.2019 முதல் செயல்பட்டு வருகின்றன. |

| | |
|---|---|
| 15. பெரம்பலூர்<br>16. வேலூர்<br>17. தூத்துக்குடி<br>18. கன்னியாகுமரி<br>(நாகர்கோவில்) | அரசாணை (நிலை) எண்.502, உள் (நீதிமன்றங்கள்) துறை, நாள் 24.9.2019–இல் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு தற்போது நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. |
| 19. காஞ்சிபுரம்<br>(செங்கல்பட்டு)<br>20. திருப்பூர்<br>21. திருவாரூர்<br>22. கோயம்புத்தூர் | நிதி ஒப்பளிப்பு செய்வதற்கான ஆணை விரைவில் வெளியிடப்பட உள்ளது. |

இதர மாவட்டங்களில் தற்போதுள்ள குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களுக்கு இவ்வழக்குகளை விசாரணை செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், 1989 தமிழகத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் அமல்படுத்தப்படுவதை மாநில அளவில் ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநர், காவல் துறை உதவித் தலைவர் மற்றும் மாவட்ட அளவில் 31 காவல் துணை கண்காணிப்பாளர்கள் மற்றும் 7 காவல் உதவி

ஆணையர்கள் மேற்பார்வையில் சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவுகள் கண்காணித்து வருகின்றன.

(i) இச்சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் 1995–ஆம் ஆண்டைய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) விதிகள், திருத்த விதி 2016 மற்றும் திருத்த விதி 2018 –இல் விதி 16–இன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு 20.07.2021 அன்று திருத்தி அமைக்கப்பட்டு இக்குழுவின் முதல் கூட்டம் 19.08.2021 அன்று நடைபெற்றது.

(ii) மேலும் விதி எண்.17(1)–இன்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் 5 அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுவை அரசு

அமைத்துள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் பிரச்சனைகளை நன்கு அறிந்தவர்களை உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான குழு குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி இச்சட்டவிதிகளை நடைமுறைப்படுத்துவது பற்றியும், பாதிக்கப் பட்டவர்களுக்குத் தீருதவி மற்றும் மறுவாழ்வு அளித்தது குறித்தும், இச்சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நிலை பற்றியும் மாவட்ட அளவில் ஆய்வு செய்யும்.

(iii) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள் 1995, விதி எண் 17(A)–இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, மாவட்டங்களில் உள்ள அனைத்து உட்கோட்டங்களிலும் உட்கோட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு அமைப்பதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டு அதன்படி

அனைத்து மாவட்டங்களிலும் உட்கோட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2020-2021-ஆம் நிதியாண்டில், 3,940 பாதிக்கப்பட்ட நபர்களுக்கு ரூ.42.49 கோடி மதிப்பிலான தீருதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2021-2022-ஆம் நிதியாண்டில் **ரூ.30.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) தீண்டாமை ஒழிப்பு பிரச்சாரம்

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தீண்டாமைக்கெதிராக பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 24-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி வரை "மனிதநேய வாரவிழா" நடத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் மனிதநேய வார விழா நடத்துவதற்காக மாவட்டங்களுக்கு தலா ரூ.50,000/-

மற்றும் மாநில அளவில் ரூ.1,00,000/- நிதி வழங்கப்படுகிறது.

வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் மூலம் தீண்டாமைக் கொடுமைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

இது தவிர, ஆண்டுதோறும் ஜனவரி 26, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களிலும், அந்தந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் விடுமுறை நாட்களிலும் சமபந்தி விருந்து ஏற்பாடு செய்யப்படுகிறது. சமபந்தி விருந்து ஏற்பாடு செய்வதில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் ஈடுபடுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2020-2021-ஆம் நிதியாண்டில், ரூ.20.41 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதியாண்டில் **ரூ.69.37 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) சமூக நல்லிணக்கத்துடன் திகழும் சிறந்த கிராமங்களைத் தேர்ந்தெடுத்தல்

தமிழ்நாட்டில், சென்னை தவிர்த்து, அனைத்து மாவட்டங்களிலும் தீண்டாமையை கடைபிடிக்காமல், நல்லிணக்கத்துடன் பொது மக்கள் கூடி வாழும் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கிராமத்திற்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திடும் பொருட்டு ரூ.10.00 இலட்சம் நிதி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2020–2021–ஆம் நிதியாண்டில், ரூ.3.60 கோடி செலவில் 36 மாவட்டங்களில் உள்ள 36 கிராமங்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளன.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதியாண்டில், **ரூ.3.60 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10. தமிழ் நாடு ஆதி திராவிடர் கலை மற்றும் இலக்கிய மேம்பாட்டுச் சங்கம்

ஆதிதிராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின எழுத்தாளர்களின் படைப்பாற்றல் மற்றும் கலை, கலாச்சாரம், இலக்கியம் போன்ற துறைகளில் சிறந்த படைப்புகளை உருவாக்குதல் முதலிய பணிகளை ஊக்குவிக்கவும், அவர்களின் ஆராய்ச்சிப் பணிகளுக்கு உதவிடவும், தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுப் பணி அமைப்பினை அரசு 2003–ஆம் ஆண்டு உருவாக்கியது. இப்பணிக்கான தனி பணிக்குழு நிதியாக (Corpus Fund) ரூ.50.00 இலட்சம் வழங்கப்பட்டு வைப்புத் தொகை கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. இந்த வைப்புத் தொகைக்காகப் பெறப்படும் வட்டித்தொகை, கதை, கட்டுரை, கவிதை,

வரலாறு மற்றும் புதினம் ஆகிய பொருண்மைகளில் சிறந்த படைப்புகளை உருவாக்கும் சிறந்த எழுத்தாளர்களுக்கு பரிசுத் தொகை வழங்க பயன்படுத்தப்படுகிறது.

ஆண்டுதோறும் சிறந்த இலக்கியப் படைப்புகளுக்காக தேர்வு செய்யப்பட்ட 10 ஆதி திராவிடர், கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின எழுத்தாளர்கள் மற்றும் ஆதிதிராவிடரின் பிரச்சனை குறித்து எழுதும் இதர இனங்களைச் சேர்ந்த ஓர் எழுத்தாளர் என 11 எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட தலா ரூ.50,000/– பரிசுத்தொகை வழங்கப்படுகிறது. இப்பரிசுத் தொகையில் 50 சதவீதம் படைப்புகளை புத்தகமாக வெளியிட முன்பணமாகவும், எஞ்சிய 50 சதவிகிதம் அச்சிட்ட பிரதிகளை அரசுக்கு வழங்கிய பின்னரும் வழங்கப்பட்டு வருகிறது.

## 11. டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் விருது.

சமுதாயத்தில் சாதி வேறுபாடுகள் அகற்றப்பட வேண்டும் என்ற உணர்வை உரமாகக் கொண்டு தமது அயரா உழைப்பின் மூலம் இந்திய அரசியல் சட்டத்தை வகுத்த அண்ணல் அம்பேத்கர் அவர்களைப் போற்றும் வகையில், தமிழ்நாட்டில் ஆதி திராவிட மக்களின் சமூக, கல்வி, பொருளாதார மேம்பாட்டிற்கும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் தொண்டாற்றிய ஒருவருக்கு "டாக்டர் அம்பேத்கர் விருது" வழங்க அரசாணை (நிலை) எண்.52, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்.22.03.1995–இல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஆண்டுதோறும் திருவள்ளுவர் தினத்தன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் டாக்டர்.அம்பேத்கர் விருது வழங்கப்படுகிறது. இவ்விருதுடன் பரிசுத் தொகையாக

ரூ.1,00,000/–க்கான காசோலை, தகுதியுரை மற்றும் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது.

2020–ஆம் ஆண்டிற்கான "டாக்டர் அம்பேத்கர் விருது" 2021–ஆம் ஆண்டின் திருவள்ளுவர் தின விழா அன்று முன்னாள் அமைச்சர், திரு.வரகூர் அ. அருணாசலம், அவர்களுக்கு வழங்கப்பட்டது.

## II. பழங்குடியினர் நலன்

பழங்குடியினர் மேம்பாட்டின் முக்கிய நோக்கம் பழங்குடியினரின் கல்வி மற்றும் சமூக நிலையை மேம்படுத்தி பழங்குடியினருக்கும், பழங்குடியினர் அல்லாதோருக்கும் உள்ள இடைவெளியைக் குறைப்பதோடு, இம்மக்களை பொருளாதார மற்றும் சமூக நீரோட்டத்தில் ஒருங்கிணைப்பதாகும். இந்நோக்கத்தை அடையும் வகையில் பழங்குடியினர் நலனுக்கென தனியாக ஓர் இயக்குநரகம் 2000–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தோற்றுவிக்கப்பட்டது. பழங்குடியினர் நலப் பொருண்மைகள் குறித்த நிர்வாக மற்றும் நிதி அதிகாரங்களுடன் முழு அதிகாரத்தோடு கூடிய தனித் துறையாக பழங்குடியினர் நலத்துறை 01.04.2018 முதல் செயல்பட்டு வருகிறது.

2011–ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள்

தொகையில் 1.10 விழுக்காட்டை உள்ளடக்கிய 7,94,697 பழங்குடியின மக்கள் 36 வகையான பிரிவுகளில் வசித்து வருகின்றனர். இவர்களுள் பெரும்பான்மையானோர் மலைப் பகுதிகளிலும், அதனை ஒட்டிய பிற இடங்களிலும் வசித்து வருகின்றனர். அவர்களது சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலை மாநில சராசரியை விட குறைவாக உள்ளது.

எனவே, தமிழ்நாட்டில் பழங்குடியினர் அதிகமாக வசித்து வரும் சேலம், திருவண்ணாமலை, திருப்பத்தூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், இராணிப்பேட்டை, தர்மபுரி, நாமக்கல், திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, நீலகிரி, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கடலூர், மதுரை, அரியலூர், திருநெல்வேலி, தென்காசி மற்றும் சென்னை ஆகிய 23 மாவட்டங்களில் பழங்குடியினரின் வளர்ச்சிக்காக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகிறது.

தற்போதைய நிலையில். பழங்குடியின மக்களை அதிகம் பாதிக்கும் ஊட்டச்சத்து குறைபாடுகள், குறைவான அடிப்படை வசதிகளுடன் வாழும் நிலை, வன வளங்கள் அழிக்கப்படுவதால் மக்கள் இடம் பெயர்தல், பொருளாதார வாய்ப்புகள் இல்லாமை மற்றும் குறைந்த கல்வி அறிவு போன்ற இன்னல்களை களைவதற்கு அரசு சிறப்பு முயற்சிகளை எடுத்து வருகிறது.

பழங்குடியின மக்களை கல்வி, சுகாதாரம், சுற்றுப்புறத் தூய்மை ஆகியவற்றில் முழுமையான மேம்பாடு அடையச் செய்வதும், அவர்களது குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, இணைப்புச்சாலைகள், மின்சார வசதி மற்றும் வீடுகள் கட்டித்தருதல் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வளர்ச்சி அடையச் செய்வதும் அரசின் முதன்மையான குறிக்கோளாகும்.

## 1. கல்வி

தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், வனத்துறையின் கீழ் செயல்படும் பள்ளிகள், இதர தனியார் பள்ளிகள் மற்றும் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப்பள்ளிகள் ஆகியவற்றில் மொத்தம் 1,81,239 பழங்குடியின மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர் (ஆதாரம் – ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் முறைமை). பழங்குடியினரின் கல்வியறிவு விகிதம் 54.34% (2011–ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி) ஏனைய பொதுப் பிரிவினரின் கல்வியறிவு விகிதமான 80.09% உடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாக உள்ளதை அறிந்துள்ள இவ்வரசு அவர்களது கல்வி மேம்பாட்டிற்கு உயர் முன்னுரிமை அளிக்கிறது.

### 1.1 பள்ளிகள்

பழங்குடியின மக்களின் கல்வி அறிவினை முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என்ற

உயரிய நோக்கில் அவர்தம் குடியிருப்புகளுக்கு அருகில் விடுதியுடன் இணைந்த உண்டி உறைவிடப் பள்ளிகள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன.

**பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் உண்டி உறைவிடப்பள்ளிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம். (2020–21)**

**1 . 1 (அ) அரசு உண்டி உறைவிடப் பள்ளிகள்**

| விவரம் | பள்ளிகள் எண்ணிக்கை | மாணவர்கள் | மாணவிகள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 210 | 4,599 | 4,317 | 8,916 |
| நடுநிலைப் பள்ளிகள் | 51 | 1,965 | 1,931 | 3,896 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 35 | 2,062 | 1,776 | 3,838 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 22 | 3,931 | 3,623 | 7,554 |
| **மொத்தம்** | **318** | **12,557** | **11,647** | **24,204** |

## 1. 1. ஆ) ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள் (2020–21)

ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் 8 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:–

| வ.எண் | மாவட்டம் | இடம் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி | வெள்ளிமலை | 478 | 0 | 478 |
| 2 | சேலம் | அபிநவம் | 0 | 480 | 480 |
| 3 | சேலம் | ஏற்காடு (நாகலூர்) | 134 | 68 | 202 |
| 4 | நீலகிரி | கோடப்பமந்து | 175 | 139 | 314 |
| 5 | திருவண்ணாமலை | அத்திப்பட்டு | 223 | 181 | 404 |
| 6 | திருப்பத்தூர் | விசமங்கலம் | 215 | 142 | 357 |
| 7 | நாமக்கல் | செங்கரை | 325 | 122 | 447 |
| 8 | செங்கல்பட்டு | பட்டிப்புலம் | 78 | 58 | 136 |
| | | **மொத்தம்** | **1,628** | **1,190** | **2,818** |

## 1 . 2 விடுதிகள்

தொலைதூரப் பகுதிகளிலிருந்து பயணம் செய்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் பழங்குடியின மாணக்கர், விடுதிகளில் தங்கிப் பயில்வதற்கு ஏதுவாக, இத்துறையால் விடுதிகள் கட்டப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன. இவ்விடுதிகளின் விவரம் பின்வருமாறு:–

**பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகள் மற்றும் மாணாக்கர் எண்ணிக்கை விவரம். (2020–21)**

| வ.எண் | விடுதிகளின் வகைப்பாடு | விடுதிகளின் எண்ணிக்கை | மாணவர் | மாணவியர் | மாணாக்கர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | பள்ளி விடுதிகள் | 40 | 1,095 | 891 | 1,986 |
| 2 | கல்லூரி விடுதிகள் | 2 | 0 | 83 | 83 |
| 3 | தொழிற் பயிற்சி நிலைய விடுதிகள் | 6 | 383 | 0 | 383 |
| | **மொத்தம்** | **48** | **1,478** | **974** | **2,452** |

மாணாக்கர் நன்கு கல்வி பயில இவ்விடுதிகளில் பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. ஆதி திராவிடர் நல விடுதி மாணாக்கருக்கு வழங்கப்படும் அனைத்து வசதிகளுடன் சூரிய ஒளி மின்விளக்கு, ஸ்வெட்டர் மற்றும் ரெயின்கோட் ஆகியவை இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கருக்கு கூடுதலாக வழங்கப்பட்டு வருகின்றன.

## 1.2. (அ) தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு நிதியுதவி

### (i) விடுதிகள்:

ஆறு தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 7 விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் 570 பழங்குடியின மாணாக்கர் பயன்பெறும் வகையில் அவர்களுக்கான உணவுக் கட்டணம் இத்துறையால் மானியமாக வழங்கப்படுகிறது. மேலும், அரசு விடுதி மாணாக்கருக்கு வழங்கப்படுவது போல தொண்டு நிறுவன விடுதிகளில் தங்கி பயிலும் மாணாக்கருக்கும்

பல்வகைச் செலவினம் மற்றும் இதர சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

### (ii) பள்ளியுடன் இணைந்த விடுதிகள்

2005–ஆம் ஆண்டு முதல் திருப்பத்தூர் மாவட்டம், ஜவ்வாது மலையில் கிராம வளர்ச்சி நிறுவனம் (Society For Rural Development) எனும் தொண்டு நிறுவனத்தால் 1–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் 1,800 பழங்குடியின மாணாக்கருக்காக நடத்தப்படும் பள்ளி மற்றும் விடுதியில் பணிபுரியும் 36 ஆசிரியர் மற்றும் 7 ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கிட ஏதுவாக கற்பிப்பு மானியம், விடுதியில் தங்கிப் பயிலும் 550 பழங்குடியின மாணாக்கருக்கு உணவுக்கட்டணம், பல்வகைச் செலவினம் மற்றும் இதர சலுகைகளும் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. 2020–2021–ஆம் நிதியாண்டில் இப்பள்ளி மற்றும் விடுதிக்காக ரூ.2.62 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டு 1,800 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதியாண்டில் **ரூ.3.18 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.2 (ஆ) பழங்குடியினர் வாழும் உட்புறப் பகுதிகளில் பள்ளிகள் துவங்கிட முன்வரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்.

பழங்குடியின மக்களின் கல்வியறிவு விகிதத்தினை உயர்த்திடும் பொருட்டு, ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில், பழங்குடியின மாணாக்கர் பயன்பெறும் வகையில் பள்ளிகள் நடத்த முன்வரும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் 2019–2020–ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2020–2021–ஆம் நிதி ஆண்டில் ரூ.1.75 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 748 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021-2022-ஆம் நிதியாண்டில் **ரூ.15.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1 .3 கல்வி உதவித்தொகை

### ஒன்றிய அரசின் கல்வி உதவித் தொகைத் திட்டம்

**(அ) போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை (ஒன்றிய, மாநில அரசுகளின் நிதிப்பகிர்வு 75 : 25)**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிலையங்களில் பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளை பயிலும் பழங்குடியின மாணாக்கருக்கு பராமரிப்புப் படிகளும் கட்டாய மற்றும் திரும்ப பெற இயலாத கல்விக் கட்டணங்களும் இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகின்றன.

சுயநிதி தொழிற் படிப்புக் கல்லூரிகளில் கல்வி பயிலும் பழங்குடியின மாணாக்கரால் கல்வி நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய, அரசு / அரசால் நியமிக்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகளுக்கான

கட்டண நிர்ணயக்குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணம், அம்மாணாக்கர் சார்பாக கல்வி நிறுவனங்களின் கணக்குகளில் நேரடியாக அரசால் ஈடுசெய்யப்படுகின்றன. உரிய பராமரிப்புப்படிகள் மாணாக்கரின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன.

2020–2021–ஆம் நிதி ஆண்டில் ரூ.44.65 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 21,383 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதி ஆண்டில் **ரூ.46.44 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தகுதி:–**

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**1 . 3 (ஆ) 9 மற்றும் 10–ஆம் வகுப்புகளில் பயிலும் பழங்குடியின மாணாக்கருக்கான, ஒன்றிய அரசின் ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டம் (ஒன்றிய, மாநில அரசுகளின் நிதி பகிர்வு 75 :25)**

ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலும் பழங்குடியின மாணாக்கருக்கு, உதவித்தொகை கீழ்க்கண்டவாறு மாணாக்கரின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது:–

| | **விடுதி மாணாக்கர் (Hosteller)** | **வெளி மாணாக்கர் (Day Scholar)** |
|---|---|---|
| பராமரிப்புப் படி (ஒரு மாதத்திற்கு) | ரூ.525/– | ரூ.225/– |
| தனி மானியம் (ஒரு ஆண்டுக்கு) | ரூ.1000/– | ரூ.750/– |

மேற்கண்ட உதவித் தொகை அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற அல்லது மத்திய / மாநில கல்வி வாரியங்களால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் பயிலும் மாணாக்கருக்கு வழங்கப்படும்.

2020–2021–ஆம் நிதி ஆண்டில் ரூ.3.90 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 14,570 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதி ஆண்டில் **ரூ.4.10 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தகுதி:**

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

### (i) மாநில அரசு கல்வி உதவித் திட்டங்கள்

பழங்குடியின மாணாக்கருக்கு, கீழ் குறிப்பிட்டுள்ள மாநில அரசின் கல்வி உதவித் தொகை மற்றும் கல்விக்கட்டணச் சலுகைத் திட்டங்கள் ஆதிதிராவிட மாணாக்கருக்கு வழங்கப்படுவது போலவே, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- மாநில அரசு சிறப்பு போஸ்ட்மெட்ரிக் கல்வித் தொகை.
- உயர் கல்வி சிறப்பு படிப்புதவித் தொகை.
- கற்பிப்புக் கட்டணச் சலுகை
- இளங்கலை மாணாக்கருக்கான கல்விக் கட்டணச் சலுகை.
- முதுகலை மாணவியருக்கான கல்விக் கட்டணச் சலுகை.
- பள்ளி மாணாக்கருக்கான சிறப்புக் கட்டணச் சலுகை.
- இதர கட்டணச் சலுகைகள்
- பெண் கல்வி ஊக்கத்தொகை. (3 முதல் 8–ஆம் வகுப்பு வரை)

# 2. ஒன்றிய அரசின் நலத் திட்டங்கள்

## 2. (அ) பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு மைய நிதியுதவி (SCA to TSS)

கல்வி, மருத்துவம், சமூக மற்றும் பொருளாதார நிலைகளில் பழங்குடியினருக்கும், இதர பிரிவினருக்கும் இடையே உள்ள இடைவெளியினைக் குறைப்பதற்காக மாநில அரசு மேற்கொள்ளும் திட்டங்களுக்கு உறுதுணையாக இருந்திடும் பொருட்டு பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு நிதியுதவியினை ஒன்றிய அரசு ஒவ்வொரு ஆண்டும் விடுவித்து வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதி பின்வருமாறு பயன்டுத்தப்படுகிறது:–

| வ. எண் | திட்டம் | நிதிப்பயன்பாட்டின் விழுக்காடு |
|---|---|---|
| 1. | பழங்குடியினருக்கு இயந்திர கலப்பைகள் வழங்குதல், தேனீ வளர்ப்புப் பெட்டிகள் வழங்குதல், பெட்டிக் கடைகள் வைத்தல் போன்ற வருவாய் ஈட்டும் திட்டங்களை மேற்கொள்ளுதல் | 60 % |
| 2. | பழங்குடியினர் பகுதிகளில் பள்ளிக் கட்டடங்கள் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு, கழிவறைக் கூடங்கள் கட்டுதல் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல் ஆகிய உட்கட்டமைப்புப் பணிகளைச் செய்தல் | 30 % |
| 3. | பழங்குடியின மக்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்குதல். | 10 % |

2020–2021–ஆம் நிதியாண்டில் ரூ.3.89 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2,070 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் 2021–2022–ஆம் நிதி ஆண்டில் ரூ.**6.51** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.(ஆ) இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275(1)

மனிதவள மேம்பாடு மற்றும் வாழ்க்கைத்தரம் உயர்வு, நிலை மேம்பாடு, வறுமை ஒழிப்பு மற்றும் சுரண்டலுக்கெதிரான பாதுகாப்பு ஆகிய நிலைகளில் நிலவும் இடைவெளியினைக் குறைத்திடும் பொருட்டு இந்திய அரசியலமைப்புச் சட்டக்கூறு 275(1)–இன் கீழ், ஒன்றிய அரசு நிதி விடுவித்து வருகிறது.

இந்நிதி, கள்ளக்குறிச்சி மாவட்டம் – வெள்ளிமலை, சேலம் மாவட்டம்–அபிநவம் மற்றும் ஏற்காடு, திருவண்ணாமலை மாவட்டம் – அத்திப்பட்டு, நீலகிரி மாவட்டம்–கோடப்பமந்து, திருப்பத்தூர் மாவட்டம் – விசமங்கலம், நாமக்கல் மாவட்டம் – செங்கரை மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் – பட்டிப்புலம் ஆகிய 8 இடங்களில் இயங்கி வரும் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப்பள்ளிகளின் தொடர் செலவினத்திற்கும், பராமரிப்பதற்கும் செலவிடப்படுகிறது.

2020–2021–ஆம் நிதியாண்டில் ரூ.24.49 கோடி செலவில் 2,502 மாணாக்கர் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதி ஆண்டில் **ரூ.17.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.(இ) அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாடு

தமிழ்நாட்டில் உள்ள 36 வகையான பழங்குடியினரில் மக்கள் தொகை குறைந்துகொண்டோ அல்லது பெருகாமலோ உள்ள 6 வகை பழங்குடியினர் அதாவது தோடா, கோட்டா, குரும்பாஸ், இருளர், பனியன் மற்றும் காட்டுநாயகன் ஆகியோர் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினராகக் வகைப்படுத்தப் பட்டுள்ளனர்.

அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியின மக்களின் வாழ்க்கை நிலைக்கேற்ப பல்வேறு நலத்திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்படுகின்றன.

அவ்வகையில் அம்மக்கள் குறித்த தளநிலை கணக்கெடுப்பு (PVTGs Baseline Survey) மேற்கொள்ளப்பட்டு அதனடிப்படையில், வீட்டு வசதி, கல்வி மேம்பாடு, சுகாதாரக் கட்டமைப்பு, நில மேம்பாடு, மேம்படுத்தப்பட்ட வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, சூரிய ஒளி மின்விளக்குகள், பாசன வசதி, திறன் மேம்பாடு மற்றும் அவர்களின் கலாச்சாரத்தைப் பாதுகாத்தல் போன்ற திட்டங்களை செயல்படுத்துவதற்காக நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

2020–2021–ஆம் நிதி ஆண்டில் ரூ.5.51 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 4,437 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2021–2022–ஆம் நிதியாண்டில் **ரூ.40.00 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.(ஈ) சிறு வன விளை பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைத் திட்டம்

வனங்களில் குடியிருக்கும் பெரும்பான்மையான பழங்குடியின மக்கள், தமது உணவு, உறைவிடம், மருந்து மற்றும் பணவரவு ஆகியவற்றிற்கு சிறு வனப் பொருட்களையே நம்பியுள்ளனர். பெரும்பாலும் இச்சிறு வனப் பொருட்களின் விலை தேவையின் அடிப்படையில் அமையாமல் வியாபாரிகளாலேயே நிர்ணயிக்கப்படுகிறது. எனவே, சிறு வனப் பொருட்களை சேகரிப்போருக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்யும்பொருட்டு "சிறு வன உற்பத்தி பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைத் திட்டம்" என்ற திட்டம் ஒன்றிய அரசின் பழங்குடியினர் விவகார அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்தியப் பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்தல் மேம்பாட்டுக் கூட்டமைப்பு மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், முதல்நிலை சிறு வனப் பொருட்களை சேகரித்தல், மதிப்புக் கூட்டுதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில், 30 சிறு வனப் பொருட்கள் சேகரிப்போரை உறுப்பினராகக் கொண்ட 10 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. இக்குழுக்களை உள்ளடக்கி ஒரு "வன்தன் விகாஸ் கேந்திரா" எனப்படும் வனவள மேம்பாட்டு மையம் அமைக்கப்படுகிறது. தமிழ்நாட்டில், திருவண்ணாமலை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள ஜவ்வாதுமலை மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காடு மலையில் ஏழு "வன்தன் விகாஸ் கேந்திரா" எனப்படும் வனவள மேம்பாட்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தினை செயல்படுத்திட மாநில ஒருங்கிணைப்பு நிறுவனமாக(State Nodal Agency), பழங்குடியினர் நலத்துறையும், இதனை செயல்படுத்தும் நிறுவனமாக, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும்

22 பெரும் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களும் (LAMPS) நியமிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் **ரூ.3.05 கோடி** நிதி வழங்கப்பட்டுள்ளது.

## 2.(உ) பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம் 2006–ஐ செயல்படுத்துதல்

13.12.2005–ஆம் நாளுக்கு முன்பிருந்து வனங்களில் குடியிருந்து வரும் பழங்குடியினரும், இத்தேதிக்கு முன்பு மூன்று தலைமுறைகளாக, அதாவது 75 ஆண்டுகளாக, பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போரும், உரிமைகள் பெறுவதற்கு வழிவகை செய்யும் "பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டம், 2006", ஒன்றிய அரசால் இயற்றப்பட்டு, 29.12.2006 முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் தமிழ்நாட்டில்

18 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதை பின்வரும் குழுக்கள் கண்காணிக்கின்றன:–

(i) அரசு தலைமைச் செயலாளரை தலைவராகக் கொண்ட மாநில அளவிலான கண்காணிப்புக் குழு.

(ii) மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான குழு.

(iii) வருவாய் கோட்ட அலுவலரை தலைவராகக் கொண்ட உட்கோட்ட அளவிலான குழு.

இச்சட்டத்தின்படி, பழங்குடியினர் குடியிருக்கும் வன நிலங்களுக்கு புவியியல் தரவின் அடிப்படையில் தனி நபர் உரிமைகள் மற்றும் சமூக உரிமைகள் ஆகியவை மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

இச்சட்டத்தின் கீழ் இதுவரை 9,120 தனிநபர் உரிமைகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட

விண்ணப்பங்களில், 9056 உரிமைகளும், **545** சமூக உரிமைகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களில், 472 உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன.

## 2. (ஊ) பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்

பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் நீலகிரி மாவட்டத்தில், மு.பாலாடா என்ற இடத்தில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கீழ் 1984–85–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பழங்குடியினர் பற்றிய விவரங்களைச் சேகரிக்கவும், அவர்களின் வாழ்க்கை முறை, கலாச்சாரம், மொழி, சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலை குறித்து ஆராய்ச்சி செய்வதற்காகவும், ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் தொடங்கப்பட்ட இம்மையம் 1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டு, தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

இம்மையத்தின் நிருவாகச் செலவினங்கள் மாநில அரசாலும், திட்ட நடவடிக்கைகள் குறித்த செலவினங்கள் ஒன்றிய அரசின் பழங்குடியினர் விவகார அமைச்சகத்தாலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

பழங்குடியினர் ஆராய்ச்சி மையம், தமிழ் நாட்டில் அழிந்துவரும் நிலையிலுள்ள பண்டைய பழங்குடியினரின் மொழிகளையும், கலாச்சாரத்தையும் பதிவுசெய்தல், பாதுகாத்தல், பழங்குடியினரின் வாழ்க்கைமுறை மற்றும் கலாச்சாரம் குறித்த நூல்களை பதிப்பித்தல், நாட்டுபுறப்பாடல்கள் மற்றும் கதைகள் சேகரித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இம்மைய வளாகத்தில், ரூ.14.25 கோடி செலவில் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேசன் லிமிடெட் [Hindustan Petroleum Corporation Limited (HPCL)] நிறுவனத்தின் மூலம் ஒரு எரிபொருள் விற்பனை மையம். அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பழங்குடியின மகளிர்

வேலை வாய்ப்பினை பெற ஏதுவாக அமைக்கப்பட்டுள்ளது.

பழங்குடியினர் அருங்காட்சியகம் 1996–ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, பழங்குடியினர் ஆராய்ச்சி மைய வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில், பழங்குடியினர் குறித்த கலைப்பொருட்கள் மற்றும் புகைப்படங்கள் அக்ரிலிக் உறையில் பாதுகாக்கப்பட்டு சூரிய மின்சார வசதியுடன் கூடிய ஒரு திறந்தவெளி அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

2020–2021–ஆம் நிதியாண்டில் ரூ.1.10 கோடி திட்ட செலவினம் மற்றும் ரூ.43.67 இலட்சம் நிருவாகச் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2021–2022–ஆம் நிதியாண்டில் இம்மையத்தின் நிருவாகச் செலவுகளுக்காக **ரூ.59.33 இலட்சம்** அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 3. மாநில அரசின் திட்டங்கள்

## 3.(அ) விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் (CTDP)

2012–2013–ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ரூ.50.00 கோடி நிதியினை விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் நில மேம்பாடு, கூரை வீடுகளைச் சீரமைத்தல், சாலைப் பணிகள், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் குடிநீர் வசதி ஆகிய பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் தாட்கோ மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

2020-2021-ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகளை மேற்கொள்ள ஆணைகள் வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறன.

(அ) ரூ.70.00 இலட்சம் செலவில் இலவச செவிலியர் பட்டயப்படிப்பு வழங்குதல்.

(ஆ) ரூ.82.00 இலட்சம் மதிப்பீட்டில் செங்கற்சூளை அமைத்து தருதல்.

(இ) ரூ.1.00 கோடி செலவில் வன உரிமைச் சட்டம் 2006-ஐ செயல்படுத்துவதற்காக புவியியல் தகவல் அமைப்பு ஏற்படுத்துதல்.

(ஈ) பழங்குடியின விவசாயிகளுக்கு துரித மின்இணைப்பு வழங்குவதற்கு ரூ.75.00 இலட்சம் வைப்புத் தொகை செலுத்துதல்.

(உ) பழங்குடியினருக்கான மானியத்துடன் கூடிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை ரூ.10.00 கோடி செலவில் தாட்கோ மூலம் செயல்படுத்துதல்.

(ஊ) சேலம் மாவட்டம்-கருமந்துறை, திருப்பத்தூர் மாவட்டம்-புதூர்நாடு, திருச்சிராப்பள்ளி மாவட்டம்-துறையூர் ஆகிய இடங்களில் பழங்குடியின மாணாக்கர் விடுதிகள் கட்டுவதற்கு இரண்டாம் தவணையாக ரூ.1.45 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2020–2021–ஆம் நிதியாண்டில் ரூ.34.59 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2021–2022–ஆம் ஆண்டில் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக **ரூ.52.12 கோடி** அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.(ஆ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் (ITDP)

மொத்த மக்கள்தொகையில் 50 விழுக்காடு மற்றும் அதற்குமேல் பழங்குடியினர் அதிகம் வாழும் பகுதிகளை மேம்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில் உள்ள 7 மாவட்டங்களைச் சார்ந்த கீழ்க்காணும் 10 பகுதிகள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளாக அரசால் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| வ. எண் | மாவட்டம் | திட்டப்பகுதிகள் |
|---|---|---|
| 1. | சேலம் | ஏற்காடு, பச்சமலை, அருநூத்துமலை |
| 2. | நாமக்கல் | கொல்லிமலை |
| 3. | கள்ளக்குறிச்சி | கல்ராயன்மலை |
| 4. | திருவண்ணாமலை | ஜவ்வாதுமலை |
| 5. | திருச்சிராப்பள்ளி | பச்சமலை |
| 6. | தருமபுரி | சித்தேரி மலை |
| 7. | திருப்பத்தூர் | ஜவ்வாது மற்றும் ஏலகிரிமலை |

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதிகளில், பழங்குடியின மக்களுக்கான நலத்திட்டப் பணிகள் மேற்குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் இயங்கி வரும் 7 திட்ட அலுவலகங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2020–2021–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.2.41 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென, 2021–2022–ஆம் நிதியாண்டில் **ரூ.2.59 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.(இ) சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் (Vocational Guidance Centre)

அரசாணை (நிலை) எண்.80, சமூகநலத்துறை, நாள்.04.02.1980–இல் ஆணையிடப்பட்டவாறு, பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் இயங்கி வருகிறது.

பழங்குடியின இளைஞர்கள் தமது வேலை மற்றும் தொழிலினை தேர்ந்தெடுத்திட ஏதவாக அவர்களுக்கு வழிகாட்டிடவும், பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகளை வழங்கிடவும் இம்மையம் உதவியாக இருந்து வருகிறது.

இம்மையத்தின் செயல்பாட்டிற்காக 2020–2021–ஆம் நிதியாண்டில் ரூ.29.42 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2021–2022–ஆம் நிதியாண்டில் இம்மையத்தின் செயல்பாட்டிற்காக **ரூ.28.56 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3 . (ஈ) தொழிற்பயிற்சி நிலையங்கள் (ITIs)**

சேலம் மாவட்டம்–கருமந்துறை, நாமக்கல் மாவட்டம்–கொல்லிமலை, திருவண்ணாமலை மாவட்டம்–ஜமுனாமரத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம்–ஆனைக்கட்டி, நீலகிரி மாவட்டம்–கூடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம்–சங்கராபுரம் ஆகிய இடங்களில் பழங்குடியினருக்கென பிரத்தியேகமாக ஆறு தொழிற்பயிற்சி நிலையங்கள் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன.

மேற்காணும் ஆறு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கான மாணவர் விடுதிகள் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வருகின்றன.

இத்திட்டத்திற்கென 2020–2021–ஆம் நிதியாண்டில் ரூ.6.79 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2021–2022–ஆம் நிதியாண்டில் இந்த 6 தொழிற்பயிற்சி நிலையங்களின் செயல்பாட்டுக்கென **ரூ.7.75 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3 . (உ) பழங்குடியினர் குடியிருப்புகளில் அடிப்படை வசதி மேம்படுத்துதல்

பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில், ரூ.50 கோடி செலவில் அடிப்படை வசதிகளான வீடு கட்டித் தருதல், இணைப்புச் சாலை மற்றும் பாதைகள் அமைத்தல், குடிநீர் வசதி ஏற்படுத்துதல் மற்றும் தெரு விளக்கு / சூரிய மின் விளக்கு அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், பழங்குடியினர் பகுதிகளில் ரூ.265.00 கோடி மதிப்பீட்டில் 8803 வீடுகளும், ரூ.395.00 கோடி மதிப்பீட்டில் அடிப்படை

உட்கட்டமைப்பு வசதிகளான இணைப்புச் சாலைகள், தெருவிளக்குகள், சூரிய மின் விளக்குகள் மற்றும் குடிநீர் வசதிகள் போன்றவற்றை மூன்றாண்டுகளில் செயல்படுத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ், 2020–2021–ஆம் நிதி ஆண்டில் ரூ.160.39 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2021–2022–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கென இரண்டாம் தவணையாக **ரூ.130.00 கோடி** ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4. பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை சரிபார்த்தல்

### (i) பழங்குடியினர் சாதிச்சான்று வழங்குதல்

பழங்குடியினருக்கான சாதிச்சான்றிதழ் வழங்கும் அதிகாரம் வருவாய் கோட்டாட்சியர் / சார் ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் சான்று

வழங்க மறுக்கும் பட்சத்தில், மாவட்ட ஆட்சியரிடம் மேல்முறையீடு செய்வதன் மூலமும், அதன் பின்னரும் குறைகள் ஏதுமிருப்பின், மாநில கூர்நோக்குக் குழுவினையும் அணுகித் தீர்வு காணலாம்.

### (ii) பழங்குடியினர் சாதிச்சான்று மெய்த்தன்மை அறிதல்

உச்சநீதிமன்ற உரிமையியல் மேல்முறையீட்டு எண்.5854/94, நாள்.02.09.1994–இல் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில், பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட சாதி சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை அறிய, மாநில அளவில் மூன்று கூர்நோக்குக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களின் அமைப்பு விவரம் பின்வருமாறு:

## மாநில அளவிலான கூர்நோக்கு குழு

| | | | |
|---|---|---|---|
| 1 | அரசு முதன்மைச் செயலாளர் / அரசு கூடுதல் செயலாளர்கள். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை | தலைவர் | பழங்குடியினர் என வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கும். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டக்கூறு 226–இன்படி சென்னை உயர் நீதிமன்றத்திலும், சட்டக்கூறு 136–இன்படி உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம். |
| 2 | இயக்குநர், பழங்குடியினர் நலம் / துணை வனப் பாதுகாவலர்கள் | உறுப்பினர் செயலர் | |
| 3 | இயக்குநர், பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்/ மானுடவியல் வல்லுநர்கள் | உறுப்பினர் | |

## கண்காணிப்புப் பிரிவுகள்

பழங்குடியினரின் சாதிச்சான்றிதழின் உண்மைத் தன்மையை அறிந்திட, களஆய்வு செய்து, சரிபார்த்து, மாநில கூர்நோக்குக் குழுவிற்கு அறிக்கை அளிக்க ஏதுவாக சென்னை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய நான்கு மண்டலங்களில் கண்காணிப்புப் பிரிவுகள் கீழ்க்கண்ட காவல்துறை அலுவலர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

| வ. எண் | பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | காவல் துணை கண்காணிப்பாளர் | 1 |
| 2. | காவல் ஆய்வாளர் அல்லது சார் காவல் ஆய்வாளர் | 1 |
| 3. | தலைமைக் காவலர் | 1 |

மேற்கண்ட நான்கு மண்டல கண்காணிப்புப் பிரிவுகளுடன், கூடுதல் காவல்துறை இயக்குநர் (சமூக நீதி மற்றும் மனித உரிமைகள்) அவர்களின் தலைமையின்கீழ் அனைத்து மாவட்டங்களிலும்

இயங்கிவரும் 38 சமூக நீதி மற்றும் மனித உரிமைப்பிரிவுகளும் (மாவட்டங்களில் 31 பிரிவுகள் மற்றும் மாநகராட்சி பகுதிகளில் 7 பிரிவுகள்) அவர்களின் பணிகளுடன் கூடுதலாக பழங்குடியினர் சாதிச்சான்றிதழ் மெய்த்தன்மை அறிதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டு, களஆய்வு மேற்கொண்டு இறுதியறிக்கை சமர்ப்பிக்க ஏதுவாக மாநில கூர்நோக்கு குழுவிற்கு பரிந்துரை செய்கின்றன. மேலும், மாவட்ட அளவில் நடைபெறும் கண்காணிப்புப் பணிக்கு உதவி புரியும் வகையில் 10 மானுடவியல் வல்லுநர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

## 5. பழங்குடியினர் துணைத் திட்டம்

பழங்குடியினர் துணைத் திட்டம் 1976–77–ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி பழங்குடியினரின், சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்கென, மாநில ஆண்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில், மாநிலத்தில் உள்ள

பழங்குடியின மக்கள் தொகை விகிதத்திற்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

2021−2022−ஆம் நிதியாண்டில், மாநில ஆண்டுத்திட்ட ஒதுக்கீடான (மாநில நலத்திட்ட செலவினம் – Welfare Expenditure of State) ரூ.67,097.46 கோடியில், பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் (பழங்குடியினர் நலத்திட்ட செலவினம் – Expenditure on Scheduled Tribes Welfare) ரூ.1306.02 கோடி (1.95 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியானது, தமிழ்நாட்டிலிருக்கும் பழங்குடியின மக்கள் தொகை விழுக்காட்டை (1.10%) காட்டிலும் அதிகமாகும்.

இத்திட்டத்தின் கீழ் திட்டங்களை வகுக்கவும், செயல்படுத்தவும் அரசு முதன்மைச் செயலர் தலைமையில் இத்துறை ஒருங்கிணைப்புத் துறையாகவும் திட்டத்தை மாவட்ட அளவில் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் பழங்குடியினர் நல இயக்குநர், கண்காணிப்பு அலுவலராகவும்

நியமிக்கப்பட்டு, துறைத் தலைமை அலுவலர்களுடன் இணைந்து கண்காணிக்கப்படுகிறது.

பழங்குடியினர் துணைத் திட்டம் 48 துறைகளை உள்ளடக்கிய 19 செயலாக்கத் துறைகள் மூலம் பழங்குடியினரின் மேம்பாடு மற்றும் நலனுக்காகச் செயல்படுத்தப்படுகிறது. செயலாக்கத் துறைகளால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகள் பழங்குடியினருக்கான திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்துவதற்காக பழங்குடியினர் நலத்துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர்.

## III. தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) 15.02.1974 முதல் ஆதி திராவிடர்களின் மேம்பாட்டிற்காக இயங்கி வருகிறது. இக்கழகத்தில் கட்டுமானப் பிரிவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு என இரு பிரிவுகள் உள்ளன. தொடக்க காலத்தில், வீடற்ற ஆதி திராவிடர்களுக்கு தீப்பிடிக்காத வீடுகள் கட்டும் பணி கழகத்தின் கட்டுமானப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டது. தற்போது பள்ளிகள், விடுதிகள் மற்றும் சமுதாயக் கூடங்கள் ஆகியவற்றின் கட்டுமானப்பணியும் இக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1980–81–இல் தொடங்கப்பட்ட இக்கழகத்தின் மேம்பாட்டுப்பிரிவு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின்

தேவைக்கேற்றவாறு பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

## 1. பங்கு மூலதனம்

இக்கழகத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் முறையே **ரூ.200 கோடி** மற்றும் **ரூ.143.53 கோடி** ஆக உள்ளது. 1980–ஆம் ஆண்டிலிருந்து இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனத்தை மாநில அரசும், ஒன்றிய அரசும் **51:49** என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன.

## 2. தாட்கோவின் நடவடிக்கைகள்

1. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

2. திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்.

3. கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல்.

## 2.1 பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

ரூ.2.00 இலட்சத்திலிருந்து ரூ.3.00 இலட்சம் வரை ஆண்டு வருமானம் பெறும், சமூகத்தின் பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் இருக்கும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக தேவையின் அடிப்படையிலான அரசு மானியம் மற்றும் வங்கி கடனுதவிகளுடன் கூடிய பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் தாட்கோ மாவட்ட மேலாளர்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மூலதனச் சொத்துக்களை உருவாக்க தேசிய மயமாக்கப்பட்ட மற்றும் கூட்டுறவு வங்கிகளிடம் நிதி உதவி பெற்றிட, ஆதிதிராவிடர்களுக்கு திட்டத் தொகையில் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.25 இலட்சம் இவற்றுள் குறைவான தொகையும், பழங்குடியினருக்கு திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.3.75 இலட்சம் இவற்றுள் குறைவான தொகையும், மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டங்கள் அவர்களின் சமூக பொருளாதார நிலையில் நல்ல மாற்றத்தினை உருவாக்கியுள்ளது.

2020–2021–ஆம் நிதியாண்டில், இத்திட்டத்தின் கீழ் 18,795 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பயனாளிகளுக்கு, ரூ.114.56 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 2.1 . அ. மானியத்துடன் கூடிய கடன் திட்டங்கள்

### (i) ஆதிதிராவிடருக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (EDP)

ஆதி திராவிட மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, 18 வயது முதல் 65 வயது வரை உள்ள ஆதி திராவிடர் பயன் பெறும் வகையில் அவர்களது கல்வித் தகுதியை கருத்தில் கொள்ளாமல், பல்வேறு தொழில்களுக்கு நிதியுதவி திட்டத்தொகையில் 30 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.25 இலட்சம் இவற்றுள் குறைவான

தொகை மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தனி நபர் மற்றும் குழுக்கள் பயன் பெறலாம்.

**இத்திட்டத்தின் கீழ், 2020–2021 –ஆம் ஆண்டு 5,026 பயனாளிகளுக்கு ரூ.65.96 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.**

## (ii) பழங்குடியினருக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் (EDP)

இத்திட்டத்தின் வாயிலாகப் பழங்குடியினர் தங்களது பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளும் பொருட்டு, வருமானம் ஈட்டக் கூடிய தொழில் புரிய மானியம் வழங்கப்படுகிறது. திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது ரூ.3.75 இலட்சம் இவற்றுள் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

**இத்திட்டத்தின் கீழ், 2020–2021–ஆம் ஆண்டு 373 பயனாளிகளுக்கு ரூ.8.24 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.**

### (iii) ஆதிதிராவிட தொழில் முனைவோர் சிறப்புத் திட்டம் – பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கான நிதியுதவி

பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு சில்லறை விற்பனை நிலையங்கள் அமைப்பதற்கு நிதியுதவி வழங்கும் இச்சிறப்புத் திட்டம் 2012–13–ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆதிதிராவிட மக்கள், 'அ' மற்றும் 'ஆ' வகைப்பாட்டில் (A & B Category) பெட்ரோல்/ டீசல் / எரிவாயு சில்லரை விற்பனை நிலையம் அமைக்க எண்ணெய் நிறுவனங்களின் முகவர்களாக செயல்பட விண்ணப்பிக்கும் பொழுதே தேவையான நிலம் வாங்குவதற்கும், வங்கி உத்தரவாதத்திற்குத் தேவையான வைப்புத் தொகைக்காகவும் நிதியுதவி அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. முகவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட பின் நடப்பு மூலதனத்திற்காக (Working Capital) நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், எண்ணெய் நிறுவனத்தால் தெரிவு செய்யப்படும்

முன்பும் அல்லது தெரிவு செய்யப்படும் பொழுதும் ஆதிதிராவிட மக்கள் பயன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**(iv) ஆதிதிராவிட இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

படித்த, வேலையற்ற 18 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட ஆதிதிராவிட இளைஞர்கள் தங்களுக்குத் தெரிந்த / விருப்பமான சுய தொழில் துவங்க இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கப்படுகிறது.

**இத்திட்டத்தின் கீழ், 2020–2021– ஆம் ஆண்டு 1,432 பயனாளிகளுக்கு ரூ.22.43 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.**

**(v) பழங்குடியின இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

இத்திட்டத்தில் ஓட்டுனர் உரிமம் மற்றும் பேட்ஜ் வைத்துள்ள பழங்குடியின இளைஞர்களுக்குப்

பயணியர் வாகனம் / ஈப்பு வாங்கிட திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்ச மானியம் ரூ.4.00 இலட்சம் வரையும், கனரக வாகனத்திற்கு திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.5.50 இலட்சம் வரையும், இதர தொழில்களுக்கு திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.3.75 இலட்சம் வரையும் மானியமாக வழங்கப்படுகிறது.

**இத்திட்டத்தின் கீழ், 2020–2021 – ஆம் ஆண்டு 13 பயனாளிகளுக்கு ரூ.46.64 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.**

### (vi) ஆதிதிராவிட இளைஞர்களுக்கான சிறப்பு சுய வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் மருத்துவம் (MBBS), பல் மருத்துவம் (BDS), சித்த மருத்துவம் (BSMS), ஆயுர்வேத மருத்துவம் (BAMS) இயற்கை மருத்துவம் மற்றும் யோகா (BNYS) ஆகிய படிப்புகளில் பட்டம் பெற்றவர்கள்,

சொந்தமாக மருத்துவ சிகிச்சை / ஆய்வகம் / மருந்தகம் அமைப்பதற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. 2013–14ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் முடநீக்கு வல்லுநர், மருந்தாளுநர், கண்ணாடி வினைஞர் (optician) மற்றும் ஆய்வகத் தொழில்நுட்ப வல்லுநர் முதலிய மருத்துவம் சார்ந்த படிப்புகளில் தகுதி பெற்றுள்ளவர்களுக்கு சொந்தமாக மருத்துவ சிகிச்சை மையம் / கண் கண்ணாடி கடை / ஆய்வகம் / மருந்தகம் அமைப்பதற்கும், விரிவுபடுத்தப்பட்டுள்ளது. விண்ணப்பிப்பவர்கள் உரிய மன்றத்தில் பதிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

**இத்திட்டத்தின் கீழ், 2020–2021–ஆம் ஆண்டு 18 பயனாளிகளுக்கு ரூ.32.87 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.**

## (vii) ஆதிதிராவிட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார உதவித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், ஆதிதிராவிட சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களது பொருளாதார ஆளுமையை மேம்படுத்திடும் பொருட்டு, அவர்கள் வருமானம் ஈட்டத்தக்க தொழிலில் முதலீடு செய்வதற்காக குறைந்த வட்டியுடன் கூடிய நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இருமுறை தர நிர்ணயம் செய்யப்பட்ட ஆதி திராவிடர் சுய உதவிக் குழுக்கள் தங்களது வருமானம் ஈட்டக்கூடிய தொழிலினை செய்வதற்காக கடன் வழங்கப்படுகிறது. தங்களுக்குத் தெரிந்த வருமானம் ஈட்டக்கூடிய தொழில் அல்லது வணிக நிறுவனத்தினை துவங்குவதற்காக ஒவ்வொரு குழுவிற்கும் திட்டத் தொகையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.2.50 இலட்சம் இவற்றுள் குறைவான தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

**இத்திட்டத்தின் கீழ், 2020–2021 –ஆம் ஆண்டு 6,160 உறுப்பினர்கள் கொண்ட 496 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.12.38 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.**

## (viii) பழங்குடியின மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார கடன்

பழங்குடியின மகளிரை மட்டும் உறுப்பினர்களாகக் கொண்ட, இருமுறை தர நிர்ணயம் செய்யப்பட்ட சுய உதவிக் குழுக்கள், வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களான கைவினைப் பொருட்கள் செய்தல், தோட்டக்கலை, பூந்தோட்டக்கலை, சுற்றுலாத் தலங்களில் சிற்றுண்டிக் கடைகள் அமைத்தல், சுற்றுலா மற்றும் உபசரிப்பு சார்ந்த தொழில்கள் செய்ய இத்திட்டத்தின் கீழ் திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் மானியமாக விடுவிக்கப்படுகிறது.

## (ix) நில மேம்பாட்டுத் திட்டம்

ஆழ்துளைக் கிணறு அமைத்தல் / திறந்தவெளிக் கிணறுகள், விசைக் கிணறுகள், சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் சுழற்சி முறை பாசனம் உள்ளிட்ட நீர்ப்பாசன வசதிகளுக்காக வங்கி மூலம் மானியத்துடன் கூடிய கடனுதவிகள் வழங்குவதன் அடிப்படையில் நிலப்பயன்பாட்டினை அதிகரிப்பதும், வருமானம் ஈட்ட வழி செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் 2013–14–ஆம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின இனத்தைச் சேர்ந்த நில உரிமையாளர்கள் பயன் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

**இத்திட்டத்தின் கீழ், 2020–2021 ஆம் ஆண்டு 50 பயனாளிகளுக்கு ரூ.65.09 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.**

### (x) நிலம் வாங்கும் திட்டம்

நிலவுடைமை சமூக நிலை உயர்வினை காட்டும் அளவுகோல் என்பதால், ஆதி திராவிட மகளிரின் நிலவுடைமையினை அதிகரிக்கவும், அவர்களின் பெயரிலேயே நிலம் வாங்கிட வழிவகுக்கும் சிறப்புத் திட்டம் மாநில அரசால் 2004–2005–ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தில் ஆதிதிராவிட மகளிருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மகளிர் இல்லாத குடும்பங்களில் ஆண்களுக்கு இவ்வுதவி வழங்கப்படுகிறது.

**இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**

- நிலம் ஆதி திராவிடர் பயனாளி பெயரில் பதிவு செய்யப்படுகிறது.
- இத்திட்டத்தின் கீழ் வாங்கப்படும் நிலங்களுக்கு முத்திரைத்தாள் மற்றும் பதிவு கட்டணத்தில் முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

- ஆதி திராவிடர் அல்லாத பிற இனத்தவரிடமிருந்து நிலம் வாங்கப்பட வேண்டும்.

## 2 . 1 . ஆ. முழு மானிய உதவித் திட்டங்கள்

வருமானம் ஈட்டும் தொழில்களுக்கு கடன் மற்றும் மானிய உதவி வழங்குவதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி–1 முதன்மை தேர்வு எழுதுவோருக்கும் மற்றும் இந்திய குடிமைப்பணி தேர்வு எழுதுவோருக்கும் நிதி உதவி, இளம் சட்டப் பட்டதாரிகள் மற்றும் பட்டயக் கணக்கர் / செலவு கணக்கர் சுயமாக தொழில் புரிய ஆதி திராவிடர் இளைஞர்களுக்கும், வேறு எந்த திட்டங்களிலும் உதவிபெறாத மற்றும் மானியம் பெற தகுதியுடையவர் என கருதும் நபர்களுக்கும் 100 விழுக்காடு மானிய உதவியினை தாட்கோ வழங்குகிறது.

**(i) இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி**

இந்திய குடிமைப் பணி முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிட இளைஞர்கள் முதன்மைத் தேர்விற்கு தங்களை தயார் படுத்திக்கொள்ள (Main Examinations) ரூ.50,000/– நிதி உதவி வழங்கப்படுகிறது.

**(ii) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி–1 முதன்மைத் தேர்வு எழுதுவதற்கு நிதியுதவி**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெறும் மாநில குடிமைப் பணிகள் தொகுதி–1 தேர்வில் முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்வு எழுதும் ஆதிதிராவிடர்/ பழங்குடியின இளைஞர்களுக்கு ரூ.50,000/– நிதியுதவி வழங்கப்படுகிறது.

## (iii) இளம் சட்டப் பட்டதாரிகளுக்கு சுயமாக தொழில் செய்வதற்காக நிதியுதவி

தமிழ்நாடு சட்டப் பல்கலைக் கழகம், நிகர் நிலைப் பல்கலைக்கழகம் மற்றும் சட்டப் பல்கலைக் கழகத்தின் அங்கீகாரம் பெற்ற சட்டக் கல்லூரிகளில் முறையான பாடத்திட்டத்தில் பயின்ற, 23 முதல் 45 வயதிற்குட்பட்ட இந்திய பார் கவுன்சில் அல்லது மாநில பார் கவுன்சிலில் பதிவு பெற்ற ஆதிதிராவிட சட்டப் பட்டதாரிகள் சுயமாகத் தொழில் துவங்க இத்திட்டத்தின் கீழ் ஒரு முறை நிதியுதவியாக ரூ.50,000/– வழங்கப்படுகிறது.

## (iv) பட்டயக் கணக்கர் / செலவுக் கணக்கர் சுயமாகத் தொழில் புரிய நிதி உதவி

ஆதிதிராவிடர் இனத்தை சார்ந்த பட்டயக் கணக்கர் / செலவுக் கணக்கர் சுயமாகத் தொழில் செய்வதை ஊக்குவிப்பதற்காக ரூ.50,000/– நிதியுதவி வழங்கப்படுகிறது.

## 2.1(இ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கான துரித மின் இணைப்பு மானிய உதவித் திட்டம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் துரித மின் இணைப்பு பெற்றிட தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு வைப்புத் தொகை செலுத்தும் இத்திட்டம் 2008–2009–ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த வைப்புத் தொகை ரூ.10,000/–,ல் இருந்து 2016–2017–ஆம் ஆண்டு முதல் ரூ.75,000/–ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

**இத்திட்டத்தின் கீழ், 2020–2021–ஆம் ஆண்டு ரூ.61.58 இலட்சம் வைப்பீடு செய்யப்பட்டு 95 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.**

## 2. 2 திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களை வேலை வாய்ப்பிற்கு தகுந்தவர்களாக உருவாக்கிடவும், வேலை போட்டிகளுக்கேற்ப அவர்கள் தங்கள் திறனை மேம்படுத்திக்கொள்ளும் வகையிலும், பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் / தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படுகின்றன. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு / சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்திட இப்பயிற்சிகள் ஒன்றிய அரசின் சிறப்பு நிதியுதவி திட்டத்தின் 10 விழுக்காடு நிதியினைக் கொண்டும், விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியின் மூலமும் வழங்கப்படுகின்றன.

**தாட்கோ மூலம் நடத்தப்படும் முக்கியமான பயிற்சிகள்**

- ஆயத்த ஆடை வடிவமைத்தல், வீட்டு அலங்கார பொருட்கள் வடிவமைத்தல் தொடர்பான பயிற்சிகள்
- தானியங்கி மற்றும் தொடர்புடைய பயிற்சிகள்
- வங்கி, நிதிச் சேவைகள் மற்றும் காப்பீட்டுத்துறை தொடர்பான பயிற்சிகள்
- அழகு மற்றும் ஆரோக்கியம் தொடர்பான பயிற்சிகள்
- மின்னணு மற்றும் வன்பொருள் தொடர்பான பயிற்சிகள்
- மருத்துவச் சேவைகள் தொடர்பான பயிற்சிகள்
- தோல் தொழில் நுட்பம் அதனுடன் தொடர்புடைய பயிற்சிகள்

- தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பயிற்சிகள்
- சரக்கு வாகன போக்குவரத்து தொடர்பான பயிற்சிகள்
- ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு தொடர்பான பயிற்சிகள்
- குழாய் செப்பனிடுதல் மற்றும் அதன் தொடர்புடைய பணிகள்
- மின்சாரம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பயிற்சிகள்
- சில்லறை வணிகம் மற்றும் தொடர்புடைய பயிற்சிகள்

**2013–2014 முதல் 2020–2021 வரை 43,046 இளைஞர்களுக்கு 349 நிறுவனங்கள் மூலம் ரூ. 62.84 கோடி மதிப்பீட்டில் திறன்மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.**

## 2.3. கட்டுமானப் பணிகள்

தாட்கோ நிறுவனத்தின் கட்டுமானப் பிரிவு, இத்துறையால் நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் விடுதிகளின் கட்டுமானப் பணிகளையும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக நவீன சமுதாயக் கூடங்கள் கட்டும் பணியினையும் மேற்கொண்டு வருகிறது. ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் கூடுதல் வசதிகளை ஏற்படுத்துதல் முதலிய பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

தாட்கோ கட்டுமானப் பிரிவு மூலம் தற்போது பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.380.64 கோடி மதிப்பிலான 502 பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### (i) ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் பணிகள்

ஆதிதிராவிட / பழங்குடியின மாணவ, மாணவியருக்கு பாபு ஜெகஜீவன் ராம் சத்ரவாஸ் யோஜனா திட்டம் மூலம் விடுதிக் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் ஒன்றிய அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவியைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### (ii) மாநில அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகள்.

நிலை உயர்த்தப்பட்ட ஆதி திராவிடர் நல மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் ஆய்வுக் கூடங்கள்கட்டுதல், விடுதிகள், சுற்றுச் சுவர் மற்றும் நவீன சமுதாயக் கூடங்கள் கட்டுதல், சிறப்பு பழுது பார்க்கும் பணி மற்றும் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ் கல்வராயன் மலையில் அரசு

பழங்குடியினர் நல உண்டி உறைவிட பள்ளிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் மாநில அரசின் நிதியுதவியின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**(iii) நபார்டு திட்டப் பணிகள்:**

**(ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி)**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கரின் நலனுக்காக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிக் கட்டடங்களுக்கு கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள் கட்டுதல், அடிப்படை வசதிகளான சுற்றுச்சுவர், குடிநீர் வசதி, கழிவறைக் கூடம் ஆகியவற்றை ஏற்படுத்துதல் மற்றும் தொடர்புடைய பணிகள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிக் கட்டடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# IV. நலக் குழுக்கள்

## 1. மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) விதிகள் 1995 மற்றும் திருத்த விதிகள், 2016, விதி 16(1)–இன்படி மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட வேண்டும். அதன்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாண்புமிகு அமைச்சர்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு 20.07.2021 அன்று திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு ஆண்டுக்கு குறைந்தபட்சம் இரு முறை கூடி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்

(வன்கொடுமைகள் தடுப்பு) விதிகள் 1989 மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) திருத்த சட்டம், 2015, ஆகியவற்றின் செயலாக்கம் மற்றும் இச்சட்டத்தின் கீழ் பதியப்பட்டுள்ள வழக்குகள் குறித்து ஆய்வு செய்வதோடு, வன்கொடுமைக்கு ஆளானோருக்கு வழங்கப்பட வேண்டிய தீருதவிகள் மற்றும் இச்சட்டத்தை செயல்படுத்தும் பல்வேறு அலுவலர்கள் / அமைப்புகளின் பணி / பங்கு குறித்தும் ஆய்வு செய்கிறது.

இக்குழுவின் கூட்டம் 19.08.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது தலைமையில் நடைபெற்றது.

## 2. மாநில ஆதி திராவிடர் நலக்குழு

ஆதி திராவிட மக்களுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்கள் முறையாக அம்மக்களுக்கு சென்றடைவதைக் கண்காணிக்கவும் மற்றும் ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் தலைமையில் மாநில ஆதி திராவிடர் நலக்குழு கடந்த 1995–ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவில் 3 அலுவல் சார்ந்த உறுப்பினர்களோடு சட்டமன்ற உறுப்பினர்கள் 24 பேரும், கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள் 6 நபர்களும் என மொத்தம் 30 அலுவல் சாரா உறுப்பினர்கள் உள்ளனர். ஆதி திராவிடர் நல ஆணையர் அவர்கள் இக்குழுவின் உறுப்பினர்–செயலராக உள்ளார்.

## 3. தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றம்

தமிழ்நாட்டில் வாழும் பழங்குடியினரின் நலன் மற்றும் அவர்களது முன்னேற்றத்திற்கு ஆலோசனை வழங்கும் விதமாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஐந்தாவது அட்டவணையில் விதி எண்.4(1)–இன்படி பழங்குடியினர் ஆன்றோர் மன்றம் 1961–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இம்மன்றத்தின் தலைவராக **மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்** அவர்களும் மற்றும் உறுப்பினர்–செயலராக பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களும் உள்ளனர். இம்மன்றத்தில் 3 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், 15 அலுவல் சாரா உறுப்பினர்களும், 2 பழங்குடியினத்தைச் சாராத உறுப்பினர்களும் சேர்த்து 20 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இம்மன்றத்தின் பதவிக்காலம் 3 ஆண்டுகள் ஆகும். ஆண்டுக்கு குறைந்தபட்சம் இரு முறை இம்மன்றத்தின் கூட்டம் கூட்டப்பட வேண்டும்.

# V. நல வாரியங்கள்

## 1. புதிரை வண்ணார் நல வாரியம்

ஆதி திராவிட இனத்தின் உட்பிரிவுகளில் ஒன்றான புதிரை வண்ணார் சமுதாயத்தின் சமூக, பொருளாதார கல்வி மேம்பாட்டிற்கென **மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்** அவர்களின் தலைமையில் 2009–ஆம் ஆண்டு புதிரை வண்ணார் நல வாரியம் அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் 12 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும், 13 அலுவல் சாரா உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆதி திராவிடர் நல ஆணையர் இவ்வாரியத்தின் உறுப்பினர்–செயலராக உள்ளார்.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நிதியுதவி வழங்கிட 2009–ஆம் ஆண்டு முதல் 2012–ஆம் ஆண்டு வரை ரூ.1.00 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

## 2. தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம்

தூய்மைப் பணிபுரிவோரின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கென அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணித்து, அவற்றின் முன்னேற்றத்தை உறுதி செய்திடும் பொருட்டு **மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்** அவர்களின் தலைமையில் 2007–ஆம் ஆண்டு 'தூய்மைப் பணிபுரிவோர் நல வாரியம்' அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் ஒரு உபதலைவர், 13 அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் 14 அலுவல் சாரா உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தாட்கோ மேலாண்மை இயக்குநர் இவ்வாரியத்தின் உறுப்பினர்–செயலராக உள்ளார்.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நிதியுதவி வழங்கிட 2008–ஆம் ஆண்டு முதல் 2010–ஆம் ஆண்டு வரை ரூ.3.00 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

### 3. பழங்குடியினர் நல வாரியம்

தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார, கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென பழங்குடியினர் நல வாரியம் **மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்** அவர்களை தலைவராக கொண்டு 2007–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் 8 அலுவல் சார்ந்த உறுப்பினர்களும் 13 அலுவல் சாரா உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். பழங்குடியினர் நல இயக்குநர் இவ்வாரியத்தின் உறுப்பினர்–செயலராக உள்ளார்.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நிதியுதவி வழங்க 2008–ஆம் ஆண்டு முதல் 2010–ஆம் ஆண்டு வரை ரூ.4.00 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

VI. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு 2021–2022–ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு

(ரூ . கோடியில்)

| வ. எண். | அலுவலகங்கள் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் | 9.64 | 0.00 | 0.40 | 10.04 |
| 2 | ஆதி திராவிடர் நலத்துறை | 3385.39 | 203.49 | 0.00 | 3588.88 |
| 3 | பழங்குடியினர் நலத்துறை | 342.02 | 201.40 | 0.00 | 543.42 |
| | மொத்தம் | 3737.05 | 404.89 | 0.40 | 4142.34 |

**என். கயல்விழி செல்வராஜ்**
**ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.**




**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 9.7.2021 அன்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுச் சங்கத்தின் மூலம் சிறந்த படைப்புகளுக்காக தேர்வு செய்யப்பட்ட 21 சிறந்த எழுத்தாளர்களுக்கு காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.**




ஆதி திராவிடர் நலத்துறையால் கட்டப்பட்டுள்ள புதிய விடுதிக் கட்டடங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 30.08.2021 அன்று திறந்து வைத்தார்கள்.



**கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான விடுதிக் கட்டடம்.**



**மயிலாடுதுறை மாவட்டம், தில்லையாடியில் ஆதி திராவிட பள்ளி மாணவியருக்கான விடுதிக் கட்டடம்.**




**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது தலைமையில் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக்கூட்டம் 19.8.2021 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.**



**மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தாட்கோ பொருளாதார மேம்பாட்டுத் திட்ட நல உதவிகளை வழங்குதல்.**



திருநெல்வேலி மாவட்டம், நல்லம்மாள்புரம் ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள 12 வகுப்பறைக் கட்டடம்.

5



நீலகிரி மாவட்டம் முத்தோரை பாலாடாவில் பழங்குடியினர் ஆராய்ச்சி மைய வளாகத்தில் முற்றிலும் பழங்குடியின மகளிரால் இயக்கப்படும் வாகன எரிபொருள் நிரப்பும் மையம்.